பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரு 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரு 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரு 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வரு புரட்டாசி-மீ 24-உ (10—10—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 24.



## உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்ப துடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமானவிலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர் கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற
**சுத்த கதர் ஜவுளிகள்.**

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# C. N. முருகைய பண்டிதர் மருந்துகள்.

## (36-வருஷத்திய அனுபவம்)

திருவள்ளுவர் ஞானவெட்டிப் பிரகாரம் குருமுப்பூவினல் முடிந்தவைகளும் 6 தலைமுறையாய் நாங்கள் கையாண்டு வருகிற சண்ட மாருதக் குளம்புதாளக பஸ்பம்சோர்ணரத்னுதி அயக்காந்த சத்துச் செந்தூரம் நாகபஸ்பம் முதலிய சிறந்த அவுஷதங்கள். ஆங்கில டாக்டர்கள் பலர் ஆப்ரேஷன் இல்லாது தீராது என்று கைவிட்ட வியாதியஸ்தர் பலரை 3 வேளை மருந்தினல் குணப்படுத்தி கவுரவ சர்ட்டிபிகேட்டுகளும் சங்கிலி மேடல் முதலானவை பெற்றிருக்கிறோம்.

### க்ஷயத்திற்கு

(1) தாளக பஸ்பம் (2) கபகஸ்தூரி எண்ணை (3) சொர்ணரத்னுதி அயக்காந்த சத்துச் செந்தூரம் (4) சிவப்பிரகாச லேகியம். நெடுங்காலமாய் அவஸ்தைப்படும் க்ஷயம் என்னும் கொள்ளை நோயையும் ஆயுளுள்ளளவும் இம்சிக்கும் (Ashthma) என்னும் சுவாசகாசம், மந்தாரகாசம், ஈளை, இருமல், சகிக்க முடியாத இளைப்பு இதுகளை எமது தாளக பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணையையும் சேர்த்து அமாவாசை பிரதிமையன்று உபயோகித்து அதன்பின் 12-நாள் சொர்ண ரத்னுதி அயக்காந்த சத்து செந்தூரமும் சிவப்பிரகாச லேகியத்தையும் உபயோகிக்கவும். பின் பௌர்ணமி பிரதிமையன்று மேற்படி பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணையும் சாப்பிட்டு அதன்பின் 12-நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு மறு அமாவாசை பிரதமையில் பஸ்பமும் கஸ்தூரி எண்ணையும் சாப்பிட்டு பின் 12 நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு விட்டால் பூர்ணசுகமாய் விடும். என் அனுபவத்தில் 1000 கணக்கான வியாதிகளைத்தீர்த்து இருக்கிறேன். குணமாகாவிடில் பணம் வாபீஸ் செய்கிறோம்.

மூன்று வேளையில் சகிக்கமுடியாத இளைப்பு இருமல் இதுகளை மட்டும் சாந்தி செய்யக்கூடிய மருந்து விலை ரூ. 6.

36-நாள் பூர்ண குணமுண்டாக்க ரூபா 75—0—0 (12-நாள் மருந்து தடவை 1-க்கு அனுப்பப்படும்) 12-நாள் மருந்து ரூ. 25—0—0 மூன்று முறைக்கு 36 நாளுக்கு ரூபாய் 75—0—0

### மேகசூலைக்கும், மூலத்திற்கும்.

குருமுப்புவினல் முடிந்தது மேகானுதி வடகம். அசனவில்வாதி தைலம்.

மேகசூலை, ஜுரசூலை, பக்கசூலை, கால்கை முளிகளில் வீக்கம், கைகால் முடக்கு, கைகால்களில் மோதுகட்டி 10. 15ஞு நடக்க முடியாமலிருக்கும் சூலைக்கு 15-வேளை மருந்தில் சுகமுண்டாகி நன்ருய் நடக்கலாம். இதல்லாமல் ரத்தமூலம், குத்தல், உள்மூலம், அபானத்தில் முளை போலிருக்கும் புரமூலம், மலத்திற்கு முன் பின் ரத்தம்வரும் சீழ்மூலம் முதலிய நவமூலங்களைக் கண்டிக்கும். ஆப்ரேஷன் தேவையில்லை.

15-வேளை மருந்திற்குப் ஒன்றுவிட்டொரு நாள் ஸ்நான தைலத்திற்கு ரூபாய் 15—0—0

### ஸ்ரீ நமசிவாயகுரு சந்தானகரணி எண்ணை. (1)

### பேரிய எண்ணை. (2)

ஸ்திரீகளுக்கு:— பலவகை வெள்ளை ரோகங்கள், மலட்டு ரோகம் மாதவிடாய் காலத்தில் பொறுக்க முடியாத வயிற்றுவலி, மாதவிடாய் அளவுக்கு குறைந்தும் அல்லது அதிகப்பட்டும் போதல் வயற்றில் கட்டி மாதம் பலமுறை மாதவிடாய் காணுதல் அல்லது பல மாதங்கள் ஆகாதிருத்தல் சிறுமிகள் பருவமாகாது பல ஆண்டுகள் வரை நின்றுவிடல் இவைகளும் கர்ப்பப்பையின் அறுவகை ரோகங்களும் 3-நாள் மருந்தில் நீங்கி மூன்று மாதத்தில் கர்ப்பம் உண்டாகும்.

(2) ஆண்களுக்கு:— அதிக போகத்தினல் உண்டாகும் நீர் கடுப்பு வெள்ளை, மஞ்சள் வெள்ளை, ரணம், கிரந்தி, சரீராதியந்தம் குத்தல் வலி, இன்னும் ரோகஸ்திரீகளினலுண்டாகும் பல வியாதிகளும் மூன்று நாள் மருந்தில் பூர்ண சுகமுண்டாகும்.

3 அவுன்ஸ் எண்ணை ரூ. 7. 1 சேர் அமிர்த சஞ்சீவி லேகியம் ரூ 15.

### மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

இது 20 வகை மேகத்தையும், 8 வகை குன்மம், 21 வகை வாய்வு 40 வகை பித்தம், ஸ்திரீகளுக்குள்ள ஆறுவகை கர்ப்பநோய்களை தீர்த்து நல்ல பசி தீபனத்தைக்கொடுத்து ஜீவாதார நரம்புகளை முறுக்கேற்றி, தாது விர்த்தியையும் ஆண்மையையும் உண்டாக்கும்.

48 நாள் லேகியம் 1 சேர் ரூ 5. 24 நாள் லேகியம் ரூ. 2—8,
12 நாள் லேகியம் ரூ. 1—4.

### நீரழிவுக்கும், தாது புஷ்டிக்கும் அமிர்த சஞ்சீவி லேகியம்.

வங்கபஸ்பம். தங்கபஸ்பம் 108புடமான அப்ரேக செந்தூரம். பவளபஸ்பம். நீரழிவு, அந்தாதாகம், மலசிக்கல். அல்லை, நீர்ப்பாண்டு சரீரத்தை வாட்சியாக்கக் கூடிய அஸ்திமேகம், நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து தேக வெளுப்பை மாற்றும் தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை. பால்ய பருவமடைய விரும்பும் விருத்தர்களுக்கு அருமையான மருந்து. கிழத்தனத்தை நீக்கி வல்லமை யடையச்செய்வதில் இதற்கு நிகரானது உலகில் கிடையாது. உலக சுகத்தை இஷ்டம்போல் அனுபவிக்கலாம். மருந்தின் பெயரைப் பாருங்கள். சாஸ்திர ரீதியாய் முறை தவருமல்செய்தது. பாலர், பெண்கள் யாவரும் சாப்பிடலாம்.

48 நாள் சாப்பிடககூடிய லேகியம் ரூ. 15—0—0

| | | | | |
|---|---|---|---|---|
| 12 நாள் அப்ரேக் செந்தூரம் | ரூ. | 6 | 4 | 4 |
| 12 நாள் வங்கபஸ்பம் | ரூ. | 8 | 0 | 0 |
| தங்க பஸ்பம் 12 நாள் | ரூ. | 6 | 4 | 0 |
| பவள பஸ்பம் 12 நாள் | ரூ. | 1 | 8 | 0 |

ஆக மொத்தம் ரூபாய் 17—0—0

### சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

ஆண், பெண் குழந்தைகள் வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவர 20 வகை மேகத்தையும், நீரழிவு, நீர் எரிச்சல், கண் எரிச்சல், கண் புகைச்சல், கைகால் எரிவு, கிரந்தி, கத்தாழைநாற்றம், அஸ்திஜுரம், வெட்டை, மயக்கம், தலை பொடுவினல் மயிர் உதிர்தல் இதுகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. 5—0—0,
12 அவுன்சு ரூ. 2—8—0, 6 அவுன்சு 1—4—0

### ராமபாணக் குளிகை.

ஆண்களுக்கு:—நீரடைப்பு கல்லடைப்பு, மலஜலக்கட்டினல் பிராணவஸ்தைப்படும் சமயமும் வயற்றில் நரம்பு பிடித்து நிமிரமுடியாதிருத்தல், அண்டவாயு விரை வீக்கம் விரைகுத்தல் வலி இவைகளின் வாதையால் தற்கொலை செய்யத் துணியும் வியாதியஸ்தருக்கு ஓர் குளிகை சுகப்படுத்தும்.

பெண்களுக்கு:—கர்ப காலத்தில் மலஜல மிறங்காது துன்பம் இடுப்புவலி கணுக்களில் வலி, 5, 7, 9வது மாதங்களில் அனுபானப்படி ஒரு குளிகை சாப்பிட்டுவர கர்ப்பப்பை ரோகங்களை நீக்கி சிசுவுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்து சுகப் பிரசவம் ஆகும். 5 குளிகை ரூ 2—8—0

### குரு ஜுரஹரி மாத்திரை.

மலேரியா என்னும் குளிர் ஜுரத்தை ஆயுள் பூராவும் வராமல் தீர்க்கும் மூன்ரும் முறை ஜுரம், நாலா முறை ஜுரம் இதுகளை வேருடன் நீக்கும். குணமாகாதவரை பணம் திருப்பி அனுப்பிவிடுகிறோம்.

6 வேளை மாத்திரையும் 9 வேளை கஷாய மருந்தும் சேர்ந்து ரூ. 5—0—0

### (Dentone) டென்ட்டோன் என்னும் பல்பொடி.

சிறந்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்டது. பற்களில் உண்டா விஷ நீர், இரத்தம் விழுதல் சீழ் வடிதல், சொத்தை வலி, ஈர்களில் எற்படும் புண் இவைகளை உடனே சுகப்படுத்தும். டப்பி 1க்கு 0—2—6, டஜன் 1 க்கு ரூ 1—8—0. குரோஸ் 1 க்கு ரூ. 18—0—0.

மேல் கண்ட அவுஷதங்கள் ஆறு தலைமுறையாயும் என் 36 வருஷ அனுபவத்தில் நடந்தேறி வருகிறது ஆகையால் இதைப்பற்றி அதிகம் விமரிசையாய் கூறவில்லை. இந்த அவுஷதங்களால் குணமில்லை யென்று நிரூபிக்கிறவர்களுக்கு பணம் வாபீசு செய்கிறோம். உபயோகிக்கும் முறையும் அனுபானமும் மருந்துடன் வரும் இன்னும் விபரங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் 1 அணு தபால் அனுப்பவும், வியாதியஸ்தரிடமிருந்துவரும் கடிதங்கள் ரகசியமாய் வைக்கப்படும்.

### நற்சாக்ஷியைக் கவனியுங்கள்.

மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் சி. எஸ் ரத்னசபாபதி முதலியார் அவர்கள் முனிசிபல் சேர்மன் டிஸ்டிரிக்ட்டு போர்டு பிரசிடெண்ட் கோயமுத்தூர்.

" ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல். வக்கீல் எம். எல். ஏ. கோயமுத்தூர்.

ஸ்ரீ நமச்சிவாயகுரு தமிழ்சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, 14-106 பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.

## உண்மையான தீபாவளி.

தீபாவளி என்பது வருஷத்திற்கொரு முறைவந்து பெருவாரியான இந்து குடும்பங்களுக்கு சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும், கொடுத்து தங்கள் குழந்தை குட்டிகள் மக்கள் மருமக்கள் முதலானவர்களோடு களிக்கும் ஒரு பெரிய பண்டிகையாகும். அப்பண்டிகையன்று ஏழையானாலும் பணக்காரனானாலும், கூலிக்காரனானாலும் முதலாளியானாலும் பண்டிகையை அனுபவிப்பதில் வித்தியாசமில்லாமல் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி ஸ்நானம் செய்வதும், புது வஸ்திரங்களை அணிவதும், பலகாரங்களை உண்பது முக்கிய கொள்கையாகும். இக்கொள்கைகள் எந்த தத்துவங்களைக் கொண்டு ஏற்படுத்தப் பட்டது என்பதில் எவ்வளவு அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும் பொதுவாய் மக்கள் சந்தோஷத்திற்கு புதிய வஸ்திரங்களையே அணியவேண்டுமென்றிருப்பதனால் ஏழைத் தொழிலாளருக்கு ஒரு விடுதலையும் ஏற்பட்டு வந்ததென்பது அபிப்பிராய பேதமில்லாமல் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். தற்கால அனுபவத்திலோ சந்தோஷமும் களிப்பும் பலவிதமாயிருந்தாலும் பெரும்பாலும் மேற்படி தீபாவளியானது ஏழைத்தொழிலாளர்களுக்கு பெருந்துரோகத்தை செய்வதற்கே வருவதாகவும் போவதாகவும் ஏற்பட்டுவிட்டது. இவ்வித துரோகத்திற்கு பணக்காரர்களும், உத்தியோகஸ்தர்களுமே தான் பெரும்பாலும் ஆதரவளிப்பவர்களாயிருக்கிறார்கள். காரணமென்ன வென்றால் பட்டுசேலைகளும், பட்டு துப்பட்டாக்களும், சரிகை சேலைகளும் சரிகை துப்பட்டாக்களும், மல்லுகளும் சல்லாக்களும் இவர்கள் தான் வாங்குகிறார்கள். அதோடு இவர்களைப் பார்த்து இவர்களைப் போல் நடிக்கவேண்டுமென்கிற சிலர் தங்களுக்குத் தகுதியில்லாதிருந்தாலும் கஷ்டப்பட்டு இவற்றையே வாங்க ஆசைப்படுகிறார்கள். கூலிக்காரர்களாகவும் ஏழைகளாகவும் உள்ளவர்களுக்கு இந்த முதலாளிகளும் பணக்காரர்களுமாயிருப்பவர்கள் துணி வாங்கிக் கொடுக்கும் முறையிலும் வெளி நாடுகளிலிருந்து வந்த துணிகளையே வாங்கிக் கொடுக்கவும் செய்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் தீபாவளி வருகிறது என்றால் பெரும்பாலும் ஏழை நூற்புகாரர்களுக்கும் கை நெசவுகாரர்களுக்கும், பெரிய துரோகமும் கொடுமையும் வரப்போகிறது என்று தான் அஞ்ச வேண்டியதாக இருந்து வருகிறது. மகாத்மா காந்தியின் சகாப்தமானது இத்தீபாவளிப் பண்டிகையை தேசத்திற்கும் ஏழை மக்களுக்கும் உண்மையான சந்தோஷத்தையும் நன்மையையும் கொடுக்கத்தக்கதான பரிசுத்த பண்டிகையாக்க வேண்டுமென்று மூன்று நான்கு வருஷங்களாக எவ்வளவோ பிரயத்தனங்கள் பட்டும் இன்னும் அது சரியான பலனை கொடுக்குமென்று நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு தீபாவளி வருவதாயிருந்தால் தங்கள் மக்களையும், மருமக்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு ஒவ்வொருவரையும் பார்த்து உனக்கு எந்த மாதிரி பட்டு வேண்டும்? உனக்கு என்ன மாதிரி துப்பட்டா வேண்டும்? என்று கேட்பதும், என்ன மாதிரியான பட்டோ, துப்பட்டாவோ சேலையோ வாங்கினால் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்பதையும் மாத்திரம் யோசிக்கிறார்களே ஒழிய, என்ன மாதிரி துணி வாங்கினால் நம் நாட்டில் தினம் ஒரு வேளை வயிறு கஞ்சி குடிப்பதற்குக் கூட மார்க்கமில்லாமல் தங்கள் மானத்தையும் கற்பையும் விற்று ஜீவிக்க வேண்டி கட்டாயப்படுத்தப்படுகிற ஏழை நூல் நூற்பவர்களையும், கைநெசவுக்காரர்களையும் திருப்தி செய்வதற்கு உதவும் என்று இவர்கள் கொஞ்சம்கூட எண்ணுவதேயில்லை. கிராமங்களில் கஞ்சிக்குக் கஷ்டப்பட்டு பட்டணங்களுக்கு வந்து தெருத் தெருவாய் அலையும் ஸ்திரீகள் நம் சகோதரிகள் என்பதை கொஞ்சமும் கவனிப்பதில்லை. இந்த ஸ்திரீகளின் வாழ்வும் தாழ்வும் நமக்கும் சம்மந்தப்பட்டதென்பதைக் கொஞ்சமும் உணர்வதில்லை. நெசவுத் தொழிற்காரர்கள் தங்களுக்குச் சரியான தொழிலில்லாமல் வெளிநாடுகளுக்குக் கூலிகளாகச் சென்று, வெள்ளைக்காரத் தோட்டக்காரர்களிடமும் கங்காணிகளிடமும் தங்கள் பெண்டுபிள்ளைகளையும் பறிகொடுத்து, மானங்கெட்டு கற்பிழந்து கஷ்டப்படுகிறார்களேயென்று கொஞ்சமும் கவலைப்படுவதேயில்லை. அவர்களும் நம்முடைய சகோதரர்கள் தானே அவர்கள் கற்பும் மானமும் கெட்டுக் கஞ்சிக்கு அலைய நாம்தானே காரணமாயிருந்து வருகிறோம் என்று கொஞ்சமும் சிந்திப்பதேயில்லை.

உத்தியோகமும், பணமும், அந்தஸ்தும் வந்தால் முதலாவது தேசாபிமானம் ஓடிப்போய்விடுகிறது. ஏழைகளிடத்தில் அன்பும் தயாளமும் ஏற்படும் வழி அடைபட்டுப் போய் விடுகிறது. இவைகளை யெல்லாம் பார்க்கும்பொழுது ஒரு தூக்குத் தண்டனையுள்ளவனுக்கு தூக்கிலிடும் தேதிகிட்ட வர வர எவ்வளவு பயமும் கஷ்டமும் ஏற்படுமோ அதுபோல் தீபாவளி வருகிறதென்றால் தீபாவளி நாள் கிட்ட நெருங்க நெருங்க ஐயோ நம் ஏழைக் கூலிக்கார ஸ்திரீகள் வயிற்றிலும் வாயிலும் மண்ணைப் போடுவதான காரியங்கள் நடைபெறப்போகிற நாள் வரப்போகிறதே! வரப்போகிறதே!! என்ற பயமும் கஷ்டமும் மனவேதனையும் ஏற்படச் செய்கிறது. எவ்வளவோ நன்மைக்காக ஏற்பட்ட பண்டிகை இக்கொடுமைக்கு உதவவா வரவேண்டும் என்று மனம் பதறுகிறது. நமது நாட்டில் நன்மைக்காக ஏற்பட்ட காரியங்களெல்லாம் எப்படி தீமைக்குதவப்பட்டு வருகிறதோ அதுபோல நமது தீபாவளியும் இவ்வளவு பெரிய தீமைக்கு ஆளாகிறதே என்று தேச க்ஷேமத்தில் கவலையுள்ளவர்களும் ஏழைகளிடத்தில் அன்புள்ளவர்களும் கவலைப்படாமலிருக்க முடியாதென்றே நம்புகிறோம். தீபாவளியின் போது அர்த்தமில்லாமல் சுடும் வெடிமருந்து பட்டாசுக்காக நம் நாட்டிலிருந்து எவ்வளவு பணம் வெளிநாட்டுக்குப் போகிறதென்பதை நமது நாட்டு ஜனங்கள் அறிவதேயில்லை. ஏதோ சிலர் அறிந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. ஒரு தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் அத்தேச மக்களுக்கு கடுகளவாவது தேசாபிமானமும், பரோபகார எண்ணமும் ஏற்பட்டால் தான் முன்னுக்கு வரமுடியும். அது இல்லாத நாடு எவ்விதத்திலும் முன்னுக்கு வராது. ஆதலால் இவ்வருஷ தீபாவளியை தேசாபிமானத்திற்கும் ஏழைகளின் கஷ்டம் நிவர்த்திக்கும் ஏழைத் தொழிலாள சகோதர சகோதரிகள் நன்மைக்கும் உபயோகப்படும்படி கொண்டாட வேண்டுமானால் பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள் முதலாளிகள் முதல் ஏழைகள், கூலிக்காரர்கள், நடுத்தர வகுப்பினர் முதலிய எல்லோரும் தீபாவளியின் பொருட்டு தங்களுக்காகவும் தங்கள் பெண்டுபிள்ளைகள் மக்கள் மருமக்கள் வேலைக்காரர்கள் ஏழைகள் முதலியவர்களுடைய ஒவ்வொருவருடைய திருப்திக்காகவும் செலவு செய்ய நினைக்கும் ஒவ்வொரு பைசாவும் நம் நாட்டிலேயே இருக்குமா? நம் நாட்டில் கஞ்சிக்கில்லாமல் திண்டாடும் ஏழைகளுக்கும் கூலிக்கார சகோதர சகோதரிகளுக்கும் போய்ச் சேருமா? அவர்கள் திருப்தி அடைவார்களா? என்று யோசித்துப்பார்த்தே செய்யவேண்டியது முக்கியமான கடமையாகும்.

அப்படிச் செய்வது வாஸ்தவமானால் துணி வாங்குவதில் வெளிநாட்டுக்குப் பணம் போகும்படியான பட்டோ, சரிகையோ, வெளி நாட்டு மல்லோ, சல்லாவோ இன்னும் பலமாதிரியான வெளிநாட்டு சாமான்களையோ வாங்காமல் நம் நாட்டில் நம் ஏழைச் சகோதரிகளால் கைராட்டினத்தில் நூற்கப்பட்டு ஏழைச் சகோதரர்களால் கைத்தறியில் நெய்யப்பட்டதுமான கதர் துணியையே வாங்கவேண்டும். அதையே உடுத்த வேண்டும். அதன்! தத்துவத்தை நமது மக்கள் மருமக்கள், பெண்டுபிள்ளைகளுக்குச் சொல்லி அதையே அவர்களையும் உடுத்தச் செய்யவேண்டும். இதனால் எத்தனை ஏழைக் குடும்பங்களில் தீபாவளி சந்தோஷமாய் நடைபெறும். இப்படிச் செய்யாவிட்டால் எத்தனை குடும்பங்களுக்கு தீபாவளி இல்லாமல் போய்விடும் என்பதையும் அறியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இப்படியே ஒவ்வொருவரும் நினைத்து எல்லோரும் கதர் வாங்க ஆரம்பித்தால் ஒரு சமயம் எல்லோருக்கும் கதர் கிடைப்பது கஷ்டமாய்ப் போனாலும் போகலாம். ஆதலால் இந்த எண்ணம் உள்ள தேசாபிமானிகளும் ஏழைக்கிரங்குபவர்களும் இப்பொழுதே கதர் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். புதுப்பாளையத்திலும், திருப்பூரிலும் இன்னும் சில இடங்களிலும் மொத்தமாய் கதர் கிடைக்கும். ஈரோடு, சேலம், மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, விருதுநகர், திருச்சி, தஞ்சாவூர், மன்னார்குடி, கோயமுத்தூர், கடலூர், மதருஸ், மாயவரம், வேலூர், ராஜபாளையம் முதலிய இடங்களில் காங்கிரஸ் டெப்போவும் காங்கிரஸ் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கதர் கடைகளும் இருக்கின்றன. சர்க்கா சங்கத்தார் கூடுமானவரை விசாரித்து சுத்தமாய் கதர் உற்பத்தி செய்பவர்களுக்கும் விற்பவர்களுக்கும் காங்கிரஸ் நற்சாக்ஷி பத்திரங்களும் கொடுத்திருக்கிறார். வாங்கிறவர்கள் தயவுசெய்து கவனித்து சுத்தகதராய்ப் பார்த்து வாங்க வேண்டும். போலிகதர், மில்நூல் கதர், வெளிநாட்டு நூல் கதர் இவைகள் வாங்குவதால் தேசத்திற்கோ, ஏழைச் சகோதர சகோதரிகளுக்கோ ஒருவித நன்மையும் உண்டாகப்போவதில்லை.

(குடிநூல்) ஈ. வே. ரா.

# ஸ்ரீவில்லிபுத்தூர்

## தாலூகா

# 5வது தேசீய மகாநாடு

---

### தலைவர் ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடுகார் நிகழ்த்திய முன்னுரைச் சுருக்கம்

நண்பர்களே!

இந்த மகாநாட்டிற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி நீங்கள் கேட்டுக்கொண்டு, அதன் மூலம் எனக்கு அளித்த கௌரவத்திற்காக உங்களைப் பாராட்டுகிறேன். நண்பர்களே இது சமயம் எங்கு பார்த்தாலும் தேர்தல் முழக்கமே பலமாய் இருக்கிறது. தற்கால நிலைமைகளில் தேர்தல் மிகவும் முக்கியமானதாகும். ஆகையால் எனது பிரசங்கத்தில் தற்கால ராஜீய நிலைமையை மட்டுமே பேசுவதாக எண்ணியிருக்கிறேன். தீண்டாமை ஒழித்தல், கத்தர் விருத்தி செய்தல், இந்து முஸ்லிம் ஒற்றுமை யேற்படுத்தல் ஆகிய விஷயங்களைப்பற்றியும், அவற்றின் அவசியத்தைப் பற்றியும் நான் இச்சமயத்திலும் உங்களுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன். அவற்றைப்பற்றி நீங்கள் நன்கு அறிவீர்களாதலால் நான் விரிவாகப் பேசவேண்டியதில்லை யென்று நினைக்கிறேன். தற்கால ராஜீய நிலைமை தேசபக்தர்களின் மனதைப் பிளக்கும் படியாயிருக்கிறது. முக்கியமாக ஒத்துழையாமை காலத்தில் நாட்டிற்காக உழைத்து கஷ்டப்பட்டவர்களின் உள்ளம் இச்சமயம் படும் பாட்டை என்னால் எடுத்துரைக்க முடியாது.

## பிராமணீயம்.

சுயராஜ்யப் போராட்டத்திற்கு இடையூறாக எப்படி கட்சிகள் முளைக்கின்றனவோ அந்தப் படியே ஒத்துழையாமை காலத்தில் பதுங்கிக் கிடந்த பிராமணீயமும் இப்பொழுது நாட்டில் தலைவிரித்தாடப் புறப்பட்டு விட்டது. கட்சிகள் ஒரு பக்கமும் பிராமணீயம் மற்றொரு பக்கமும், பிரிட்டாணீயம் இன்னொரு பக்கமும் இருந்து நம்மைத் தாக்குகின்றன. இவற்றையெல்லாம் நாம் எதிர்த்துத் தோற்கடிப்பதற்கு உறுதிகொண்டால் தான் நம்மால் சுதந்திரமடைய முடியும். சுதந்திரம் என்றால் ராஜீய சுதந்திரம் மட்டுமல்ல. **பிராமணீயக் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுதலை பெற்று சுதந்திரம் அடைய வேண்டும்** அப்பொழுதுதான் உண்மையான சுதந்திரம் பெற்றவர்களாவோம்.

பிரிட்டாணீயம் நமது உடம்பை அடிமைப் படுத்தி வைத்திருக்கிறது; மற்றொரு பக்கம் **பிராமணீயம் நமது ஆத்மாவை அடிமைப் படுத்தி வைத்திருக்கிறது.** பிராமணீயம் மதத்தின் பேரால் நமது சுய மரியாதையையும், சுதந்திர உணர்ச்சியையும் போக்கிவிட்டது. பிராமணீயம் ஜனங்களுக்கு சமத்துவம் கொடுக்க மறுக்கிறது. ஆகவே **பிராமணரல்லாதார் மத விஷயமாக பிராமணருக்கும் எல்லாரும் ராஜீய விஷயத்தில் பிரிட்டிஷாருக்கும் அடிமைகளாயிருக்கிறோம்.** நமக்குள் சமத்துவமோ சுதந்திரமோ, சகோதர உணர்ச்சியோ, ஒற்றுமையோ இல்லாமல் நாம் ராஜீய சுதந்திரம் அடைய முடியாது. அப்படியே அடைந்தாலும் அது நம் கையில் நிற்காது. நாம் ராஜீய சுதந்திரமடைய விரும்பினால் முதலில் நமக்குள் சமத்துவத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியதும் அவசியம். கஷ்டமில்லாமல் சுகமில்லை. விடுதலையில்லாமல் சந்தோஷமுமில்லை. "வழிநன்றாய்த் தெரிகிறது. துக்கத்தையோ, மயக்கத்தையோ உதறித் தள்ளிவிட்டு முடிவு வரையில் போராட வேண்டு மென்று நாம் துணியாவிட்டால் நாம் பேடிகள் நமது எதிர்காலத்தில் நமக்கு நாமே நாசத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறோம்." என்று மாஜினி சொல்வதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## சுயராஜ்யக் கட்சி.

நான் சுயராஜ்யக் கட்சியில் ஒருபோதும் சேரா விட்டாலும், ஆரம்பத்தில் அதனுடைய திட்டத்தின் மேன்மையை அறிந்து அதற்கு தமிழ் நாட்டில் பலமான ஆதரவு தேடிக் கொடுத்தேன். ஆனால் நான் எதிர் பார்த்ததற்கு விரோதமாக அக்கட்சியின் கொள்கைகளும் மாறி விட்டதோடு சுயராஜ்யக் கட்சியும் பிராமணர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டு விட்டது. அவர்கள்செய்து வந்திருக்கிற காரியங்களிலிருந்து **பிராமணரல்லாதாரை நசுக்குவதற்கு பிராமணர் அக்கட்சியை உபயோகித்து வருகிறார்களென்பது தெரிந்துபோய்விட்டது.** நாட்டு ஜனங்களுக்கு யாதொரு நன்மையையும் தேடாமல் தலைவர்கள் தங்கள் சுய நலத்திற்காக மட்டும் அக்கட்சியை உபயோகித்து வருவது பகிரங்க ரகசியம். வடமேற்கு (முஸ்லீம்) மகாணங்களுக்கு சீர் திருத்தம் கொடுக்க மறுத்ததும், பஞ்சாபில் லேவா தேவிக்காரர் மசோதாவை எதிர்த்ததும், பம்பாயில் பிராமணப் புரோகிதர்கள் செய்துவரும் அட்டூழியங்களை அடக்குவதற்கு பம்பாய் சட்ட சபையில் கொண்டுவந்த புரோகிதர் மசோதாவை எதிர்த்ததும், சென்னையில் தேவஸ்தான மசோதாவை எதிர்த்ததும் சுயராஜ்யக் கட்சி பிராமணர்கட்சியென்பதும், பிராமணரல்லாதாருக்கு விரோதமான கட்சியென்பதும், ஏழைகளை ஏமாற்றும் கட்சியென்பதும், முஸ்லிம்களை மோசஞ் செய்யும் கட்சி யென்பதும், சுய நலக்காரரின் கட்சி யென்பதும் தெளிவாகி விட்டது. லாலா லஜிபதிராய் "சென்னை ராஜீய பிராமணர் தாங்கள் மட்டும் ஜாதி அபிமானத்தை விடாமல், பிராமணரல்லாதார் ஜாதி அபிமானம் கொண்டிருப்பதாக அவர்கள் மீது குற்றஞ் சாட்டுகிறார்கள்" என்று சொல்லியது மிகவும் சரியானது. தேசியத்தைப் பற்றி அவர்கள் பேசுவதெல்லாம் வெறும் புரட்டாகும். ராஜ்ய நோக்கத்துடன், சுயராஜ்யமடைவதற்கு முட்டுக் கட்டையாக நிற்கும் சமயங்களில் ஜஸ்டிஸ். கட்சியை அவர்கள் எதிர்த்து வந்தபோது நான் ஆதரித்தே வந்தேன். ஆனால் சமீப காலமாக அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை தாக்கி வருவதெல்லாம் ராஜ்ய நோக்கத்துடன் அல்ல வென்பது தெரிந்துபோய் விட்டது. பிராமணரல்லாதார் என்ற பாவத்திற்காக அவர்களை தொலைத்துவிட வேண்டுமென்றே அவர்கள் நிச்சயித்திருப்பதாக தெரிந்து கொண்டோம். இல்லாவிட்டால் தேவஸ்தான மசோதாவை எதிர்ப்பானேன்? ஆனால் வெளியில் அப்படிச் சொல்லிக் கொள்ள அவர்களுக்கு தைரியமில்லை. ஜஸ்டிஸ் கட்சியை மட்டுமல்ல; தேசீய பிராமணரல்லாதாரைக் கூட வீழ்த்திவிட கட்டுப் பாடாக முயற்சி செய்து வருகிறார்கள். கூலிக்காரர்களை விட்டு பிரசங்கங்களில் கண்டபடி திட்டச் சொல்லுவதும் அவைகளை தங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கச் சொல்லுவதும் நீங்களெல்லாரும் அறிந்த விஷயங்களே.

## கடைசிப் போராட்டம்.

**பிராமணரின். வர்ணாசிரம தர்மந்தான் நமது நாட்டை குட்டிச் சுவராக்கி அடிமைப்படுத்தி விட்டது.** 1800 ஜாதிகளும், உட்பிரிவுகளும், நமது நாட்டிலிருக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக பிராமணீயம் இருந்துகொண்டு அடக்கி யாளுகிறது. இதன் பயனாகத் தான் ஜனங்களுக்கு விரிந்த அறிவோ, சகோதர உணர்ச்சியோ, தேசபக்தியோ ஏற்பட முடியாமலிருக்கிறது. இந்த வித்தியாசங்களைப் போக்க பிராமணீயத்தையும், ஜாதி வித்தியாசங்களையும் ஒழிக்க வேண்டும். பிராமணரில் உத்தமர்கள் இல்லாமலில்லை. பிராமணர் என்று நான் சொல்லும் போது அந்த சமூகம் முழுவதையுமே குறிப்பிடவில்லை. நமது நாட்டிற்கு சில உத்தம பிராமணர்களையோர் நன்மைகள் செய்திருக்கிறார்கள். அவர்களை நாம் எக்காலத்திலும் போற்றுவோம். ஆனால் அவர்களுடன் தற்கால சுயராஜ்யக் கட்சி பிராமணர்களை ஒருபோதும் சேர்க்க முடியாது. இவர்கள் சுயநலங்கொண்டு, தங்களை அறிந்தோ அறியாமலோ தங்கள் ஜாதியின் உயர்வை ஸ்தாபிக்க சுயராஜ்யக் கட்சியின் மூலம் வழி தேடுகிறார்கள். இதுதான் இந் நாட்டில் பிராமணரின் கடைசிப் போராட்டமாகும். ஆகவே தேர்தலில் அதைத் தோற்கடிக்க வேண்டியது தேசாபிமானி ஒவ்வொருவரின் கடமையாகும். தேசபந்து சுயராஜ்யக் கட்சியை ஸ்தாபிக்கும் போது கொண்டிருந்த உத்தம நோக்கங்களை அவர்கள் காற்று வாக்கில் விட்டு விட்டார்கள். அதனால் தான் தேசத்திற்காகவே பிறந்து வளர்ந்து, தேசத்திற்காகவே உழைத்துவரும் லாலா லஜபதிராய் போன்ற உத்தமர்கள் சுயராஜ்யக் கட்சிக்கு விரோதமாய்க் கிளம்பியிருக்கிறார்கள். ஆகவே சுயராஜ்யக் கட்சி தேசீய கட்சியல்ல; பிராமணர்களால் நடத்தப்படும் வகுப்புக் கட்சியே யாகும்.

## ஜஸ்டிஸ் கட்சி.

நமது நாட்டிலுள்ள மற்றொரு கட்சியான **ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதாருக்காக பல நன்மைகள் செய்திருக்கிறதென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்** 100 க்கு 4 வீதமுள்ள பிராமணர் ஏகபோகமாக அநுபவித்து வந்த உத்தியோகங்களை 100 க்கு 96 வீதமுள்ள பிராமணரல்லாதாருக்கும் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே அது ஆரம்பிக்கப்பட்டு தனது நோக்கத்தை பூர்த்தி செய்து வருகிறது. அதனால் தான் அதன் மீது பிராமணர் கட்சியான சுயராஜ்யக் கட்சி கோபங் கொண்டிருக்கிறதென்பதையும் ஜனங்கள் அறிவார்கள். அவ்விஷயத்தில் பிராமணரல்லாதாருக்காக ஜஸ்டிஸ் கட்சி சிலாக்கியமான வேலைகளைச் செய்திருந்த போதிலும், உத்தியோகம் மட்டும் நமது லட்சியமல்ல. சுயராஜ்யமே நமது லட்சியம் ஆகையால் பிராமணருடன் போட்டி போடுவதற்காக சர்க்காருடன் ஒத்துழைப்பதென்ற ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கை எனக்குப் பிடிக்கவில்லை. இந்த அபிப்பிராயத்தை ஆதி முதல் சொல்லி வருகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அக்கட்சியையும் என்னால் ஆதரிக்க முடியாது. ராஜீய முன்னேற்ற விஷயமாகவும் அவர்கள் திட்டம் போட்டுக்கொண்டு வேலை செய்யவேண்டும். லார்ட் கோஷன் சட்ட சபையைக் கலைக்கும் போது செய்த பிரசங்கத்தை ஜஸ்டிஸ் கட்சி கவனிக்குமென்று நம்புகிறேன்: பிராமணரல்லாதாரின் பெயரைச் சொல்லிக்கொண்டு எப்படி ஜஸ்டிஸ் கட்சி சர்க்கார் தாஸர்களாயிருக்கிறார்களோ அதைப்போலவே சுயராஜ்யம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு சுயராஜ்யக் கட்சி பிராமணீயத்தின் ஏஜண்டாயிருக்கிறது.

## யாருக்கு வோட்கொடுப்பது.

தேர்தல் நெருங்குகிறது பற்பல ராஜீய காரணங்களை முன்னிட்டு இந்த தேர்தல் மிகவும் முக்கியமானதாகும் ஜஸ்டிஸ்கட்சியாரின் கொள்கைகளை மாற்றுதவனாயில் அவர்களுக்கு ஓட்டு கொடுத்து. அவர்கள் பெரும் பான்மையோராக சட்ட சபைக்குள் வரும்படி செய்து விட்டால் சர்க்கார் கை பலப்பட்டு விடும். **அல்லது சுயராஜ்யக் கட்சியார் பெரும்பான்மையோராக வரும்படி செய்துவிட்டால் பிராமணீயம் தனது பழைய அட்டகாசங்களை மறுபடியும் ஆரம்பித்து ஜனங்களை சாஸ்வத அடிமைகளாக்கி வைத்து விடும்**

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.)

## ஈரோடு சேர்மென்
## ஸ்ரீமான் T. ஸ்ரீனிவாச முதலியாரின் மறுப்பும், அதற்குச் சமாதானமும்.

---

ஈரோடு முனிசிபல் சேர்மென் ஸ்ரீமான் டி. சீனிவாச முதலியார் அவர்களைப்பற்றி "குடியரசில்" கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையாகவும் அவ்வியாசத்திற்கு மறுப்பாகவும், ஒரு விஷயம் அனுப்பியுள்ளார். அதன் பீடிகையில் நாயக்கருக்கும் மற்றும் இரண்டொரு கவுன்சிலருக்கும் தனக்கும் பழைய விரோதமிருப்பதாகக் குறிப்பிட்டுவிட்டு பிறகு அடியிற்கண்ட மறுப்பு எழுதியிருக்கிறார். நமது கேள்விகள் சொந்த விரோதங்களைப்பற்றி விவகரிப்பதற்கல்ல. ஆனாலும் அவ் விரோதங்கள் உண்மையா பொய்யா என்பதை சாவகாசமாய் வைத்துக்கொள்ளலாம்.

ஸ்ரீமான் முதலியார் இம்மாதிரி செய்தது உண்டா? இல்லையா? என்பதுதான் இதுசமயம் நமது கேள்வி. ஆதலால் அதற்குச் சமாதானமாக எழுதியிருப்பதை மாத்திரம் வெளியிட்டுவிட்டு அதன் உண்மையை வெளிப்படுத்துகிறோம். அதாவது:—

1. "முனிசிபல் பணத்தை எடுத்து சொந்த உபயோகப் படுத்தினதாக சொல்வது நம்பத்தகாத பொய்; இது விஷயமாக ஒரு கவுன்சிலர் சேர்மெனைக் கேள்வி கேட்டதாகச் சொல்வதும் பொய்; மற்றொரு கவுன்சிலர் கணக்குப்பார்க்க வேண்டிக்கொண்டாரென்பதும் பொய்" என்று எழுதி மற்றவை எவையும் பொய்யென்று எழுதியிருக்கிறார்.

இம் மூன்று விஷயங்களுக்கும் நாம் பதில் எழுதி இவற்றிற்கு பதில் வந்தபின் மற்றவைகளையும் பற்றி எழுதி பதில் எழுதுவோம்.

1925-ஞு ஜுன்-மீ 19-உ எவ்வித ஆதாரமுமில்லாமல் 700 ரூபாய்களுக்கு தன்பேருக்கே செக்குஎழுதிரூபாய் பெற்று ஜுன் மாதம் 26-உ ஈரோடு அர்பன் பாங்கியில் 750 ரூபாய் தனது சொந்த கடனுக்குக் கட்டப்பட்டிருக்கிறது. இது செக்கு புஸ்தகத்திலும் அர்பன் பாங்கி கணக்கிலும் பார்க்கலாம். 50 ரூ. கிடைக்காததால் 5, 6 நாள் பணம் கையில் வைக்கப்பட்டிருந்தது. அந்த ஐம்பது ரூபாய் ஒரு வழியில் கிடைத்தவுடன் அர்பன் பாங்கியில் கட்டப்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி எந்தக் கவுன்சிலரும் கேள்விகேட்கவில்லை என்பதற்கு சமாதானம். கவுன்சிலர் மகா-ா-ஸ்ரீ E. S. கணபதி அய்யர் அவர்களால் அடியில் கண்டபடி கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

"சேர்மென் அவர்கள் தன் பேருக்கே செக் எழுதி 700 ரூ. சாமான்கள் வாங்க அட்வான்சென்று எடுத்துக்கொண்டது உண்மையா? அப்படியானால் அது ஏதாவது ஒரு கவுன்சில் தீர்மானத்தை முன்னிட்டு எடுத்துக்கொண்டதா? அல்லது கவுன்சில் தீர்மானத்தை எதிர்பார்த்து எடுத்து பின்னால் சரிசெய்து விடலாமென்றா? அந்தப் பணத்திற்கு ஏதாவது சாமான்கள் வாங்கப்பட்டனவா" என்று இம்மாதிரியாக பல கேள்விகள், எழுதி சேர்மெனுக்கு அனுப்பியிருக்கிறார். இதற்கு வரவு தேதி போட்ட ரசீதும் இருக்கிறது. ஆனால் இது வரை அதற்குப் பதிலளிக்கப்படவில்லை.

கணக்கு கேட்டது கவுன்சிலர் ஸ்ரீமான் M. S. முத்துகருப்ப செட்டியார் அவர்கள். 5-12-25-ல் "இன்று மாலை 4-மணிக்கு அடியில்கண்ட கணக்குகள்பார்க்கவேண்டியிருக்கிறபடியால் தயவு செய்து ஆபீஸ் குமாஸ்தாக்களுக்கு குறிப்பு புஸ்தகமும், செக்கும் சிட்டாவும் சில்லரை கணக்குகளுக்கு ஜுன் முதல் டிசம்பர் வரை சில்லரைப்பட்டிகளும் பார்க்க உத்திரவிடக் கோருகிறேன்" என்று எழுதிக்கொடுத்து கையெழுத்து வாங்கி இருக்கிறார்.

அதற்கு பதில் சேர்மென் T. ஸ்ரீனிவாச முதலியார் அவர்கள் எழுதியதாவது:—

15-12-25-ல் முனிசிபல் கணக்கு வகைரா பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட மகா-ா-ஸ்ரீ முத்துகருப்ப செட்டியார் வேண்டுகோள் படிக்கப்பட்டது.

### உத்திரவு

டிஸ்டிரிக்ட் முனிசிபல் ஆக்ட் 20, 21, 34 பிரிவுகளின்படி மகா-ா-ஸ்ரீ முத்துகருப்ப செட்டியார் கேட்பது போன்ற கணக்குகள் ஒரு கவுன்சிலர் பார்க்க உரிமை யில்லாதவரென்று நான் அபிப்பிராயப் படுகிறபடியால் அவர் கேட்கிறபடி கணக்குப் பார்க்க அனுமதிக்க முடியாததற்கு வருந்துகிறேன்.

5-12-25 } (ஒப்பம்) T. சீனிவாசம்
ஈரோடு. } சேர்மென்.

என்று பதிலெழுதி இருக்கிறார் இதன்மேல் மறுபடியும் 16-1-26ல் சேர்மென் அவர்களுக்கு ஸ்ரீமான் முத்துக்கருப்ப செட்டியார் அவர்கள் எழுதிய கடிதத்தின் சுருக்கம் "கவுன்சிலர்கள் கணக்கு பார்க்க உரிமை இல்லையென்று சொல்வது தப்பு என்றும், சேர்மென் காட்டியிருக்கும் சட்டபிரிவு பொருத்தமற்றதென்றும், முனிசிபல் அக்கவுண்ட் கோட் 11பிரகாரம் தனக்கு உரிமை உண்டு என்றும்" எழுதி அனுப்பி இரசீதும் பெற்று இருக்கிறார்.

இதற்குபதில்" உங்கள் வர்த்தமான சம்பந்தமான ஆதாரங்கள் சேர்மென் வசமிருப்பதாலும், அவர் தற்காலமாக ஊரிலில்லாததாலும் அவர் ஒன்று இரண்டு நாளில் வரக் கூடுமானதாலும் வரும்வரை தயவுசெய்து பொறுக்க வேண்டும்.

(ஒப்பம்) V. I. டேவிட்,
வைஸ் சேர்மென்.
16-1-26.

என்று பதிலெழுதப்பட்டிருக்கிறது.

இவைகள் உண்மையானவைகளா? அல்லது கற்பனைகளா? என்பதற்குத் தயவுசெய்து சேர்மென் ஸ்ரீமான் டி. சீனிவாச முதலியார் அவர்கள் பதில் எழுதினால் மற்ற விபரங்களுக்கும் விபரமான சமாதானம் எழுதலாம்.

---

## வட ஆற்காடு ஜில்லா வாசிகளுக்கு ஓர் எச்சரிக்கை.

---

அன்புருவாய சகோதர சகோதரிகளே!

நீங்கள் அறியாத விஷயங்களைப் புதிதாக உங்கள் முன்னிலையில் கூற நான் முன் வந்தேனல்லன். நீங்கள் உணர்ந்து உங்கள் மனதில் பதிந்து கிடக்கும் விஷயங்களையே உங்களுக்கு ஞாபக மூட்ட வந்தவனாகும். "சுடர் விளக்காயினும் நன்றாய்த் துலங்கிட தூண்டுகோலொன்று வேண்டும்." என்று ஆப்தர்கள் கூறியாங்கே, பொது ஜன பணிமக்களில் ஒருவனாய யான் தங்கள் சமூகத்தில் எச்சரிப்ப தென்னையோ வெனின் கூறுவேன்.

அண்மையில் நடைபெறவிருக்கும் சென்னை மாகாண சட்ட நிரூபண சபையின் தேர்தலில், வட ஆற்காடு ஜில்லா மஹம்மதிய ரல்லாதாரின் தொகுதியின் ஸ்தானங்கள் மூன்றிற்கும், நியாயவாதிகளான இச்சில்லாவாசிகளில், ஆரணி, திருவாளர், ஏ. என். பரசுராம நாய்க்கரவர்களும், இராயவேலூர் நகர பரிபாலன அவைத்தலைவர் ராவ் பஹதூர் காரு கிருஷ்ணசாமி நாயுடுகாரு அவர்களும், குடியாத்தம் நகர பரிபாலன சபைத் தலைவர், திருவாளர், எம். வி. பீமராஜ முதலியாரவர்களும், உங்களின் பூரண தயவை எதிர் நோக்கி நின்றிருப்பது யாவருக்கும் குன்றின் மேலிட்ட மங்காத் தீபம் போலுந் தெரிந்த விஷயமே என்பதை உங்கள் நினைவுக்கு விட்டுவிட்டு, நான் மேல் செல்கின்றேன். ஏழைகட்கிரங்கும் மதிவலாளர்களாய இம்மாணிக்கச் சுடர்களைப் பற்றி, இன்னலை புரிந்து தத்தம் விஷமத்தைக் காட்டிவரும் பாமர மக்களில் பலர் காங்கிரஸ், சுயராஜ்யம் முதலிய கட்சியைச் சார்ந்தவர்களெனத் தத்தம் ஊத்தைப் பெருவாய் பிளக்கும் வண்ணம் கூவிக்கொண்டு ஈரிரண்டு சகடங்களால் பிணைக்கப்பட்ட இரத மேறிப் பறந்துவந்து உங்கள் மத்தியில் தோன்றி, பலவிதமாய அபாண்டங்களையும் வஞ்சக வார்த்தைகளையும் பறையறைவித்து தாங்களே புனிதமாயவர்கள் தங்களால் உலகத்திற்கு யாதொரு ஹானியு முண்டாகாததலால் தங்களையே தேர்தல் காலத்தில் தேர்ந்தெடுத்து சட்ட சபைக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென உங்களிடம் கெஞ்சுவார்கள். ஆதலால் அன்பர்களே! ஐயங்கார் ஐயர் முதலிய சுயநலப் பார்ப்பனர்களின் வாலைப்பற்றியுருவி பின்திரிந்து, ருத்திராக்ஷப் பூனைபோல் வேடந் தரித்து பாமர மக்கட் டொகுதியினரை ஏமாற்றி கூலிக்கு மாரடித்து உண்டு கொழுத்துவரும் போலிக் குழாங்கட்குச் செவிசாய்க்காதிருந்து, முற்கூறிய நம் ஜில்லா வாசிகளாய நாய்க்கர், நாயுடுகாரு, முதலியார் ஆகிய இம் மூவர்க்கும் உங்களின் விலை பெறுதலில்லா இரத்தினங்களாய வாக்குகளைக் கொடுத்து ஆதரித்து, தேர்தல் காலத்தில் நம் சுதந்திரமாய சுயமரியாதைக் கொடியை உயர்த்தி, இஜ்ஜில்லா வெங்கும் பார்ப்பனக் கட்சியினரின் கொட்டம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டதென, சாவுமணி யடித்து ஜெய பேரிகை கொட்டுமாறு, உங்களில் ஓர் ஓட்டுரிமையாளனாகிய நான் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

முருகேச முதலியார்.

## எச்சரிக்கை.

தென்னிந்திய வோட்டர்களே! சோதனைக்காலம் வந்து விட்டது இன்றைய நாளிலிருந்து ஒரு மாதத்தில் மாகாண சட்ட சபைக்கும், இந்திய சட்டசபைக்கும் நீங்கள் உங்களுடைய வாக்குரிமையை உபயோகிக்க அழைக்கப்படுவீர்கள். லட்சக்கணக்கான உங்கள் நாட்டினரின் கதி நீங்கள் யாரைத் தெரிந்தெடுக்கிறீர்களோ அவர்கள் பால்தான் இருக்கிறது. உங்கள்பாலுள்ள பரிசுத்தமான கடமையை நீங்கள் உணருகிறீர்களா? தேர்தல் உங்கள் தேசாபிமானத்தையும் நாட்டினரிடம் நீங்கள் கொண்டுள்ள பேரன்பையும் சோதிப்பதாகும். ஏமாறி விடாதீர்கள். இது உண்மைக்கும், பொய்மைக்கும் நடைபெறும் போராகும். நீதிக்கும் அநீதிக்கும், சுயநலமற்ற பொதுத் தொண்டிற்கும் தானே வாழவேண்டுமென்ற சுயநலத்திற்கும், சுதந்திர உணர்வு படைத்த மக்களுக்கும் குறுகிய நோக்கமுடைய சுயநலக் கூட்டத்தாருக்கும் நடைபெறும் போராகும். தேசசரித்திரத்திலே இதே போர் முன்பும் பல தடவை நடந்திருக்கிறது. ஆனால் இதுதான் முடிவான போராகும். சகோதரர்களே! சமயோசித வாதிகள் இன்பமாய்ப் பேசும் பகட்டு மொழிகளைக் கண்டு மயங்கி விடாதீர்கள். ஏமாற்றும் அரசியல் வாதிகளின் ஆரவாரத்தொனிக்குக் காது கொடுக்காதேயுங்கள். கொடுக்கும் வாக்குத் தத்தங்களை நிறைவேற்றத் தவறுபவர்கள் தாராளமாய்ச் செய்யும் வாக்குத் தத்தங்களை நம்பாதேயுங்கள். வாக்குத்தத்தங்கள் செய்வதிலும் அவர்களுடையகாரியங்கைகூடியவுடன் அவைகளைப் புறகணிப்பதிலும் அவர்கள் கைதேர்ந்தவர்கள். இதற்கு முன் நீங்கள் எத்தனையோ தடவை ஏமாறி விடவில்லையா? இன்னும் ஏமாறப்போகிறீர்களா? இம்மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கும், சுயராஜியக் கட்சியென்று சொல்லப்படும் பார்ப்பனர்களும் அவர்கள் வால்பிடித்தலையும் ஒரு சில பார்ப்பனரல்லாதாருமடங்கிய உண்மையில் பார்ப்பனர் கட்சிக்குமே போர் நடக்கிறது. எந்த பார்ப்பனரல்லாதாரும் பொறுப்பான பெரிய பதவியையடைய இப்பார்ப்பனக் கட்சி சகிக்காது. உடல் பொருள் ஆவியனைத்தையும் காங்கிரசுக்காகத்தியாகஞ் செய்த காங்கிரஸ் வாதிகளெல்லாம் மனமுடைந்து விலகும்படி அக்கட்சி செய்து விட்டது. இந்திய சட்டசபைக்கு தனக்கு ஒட்டு வேண்டுமென்று உங்களிடம் கேட்கும் திரு. சீனிவாசய்யங்கார் அவர்களுடைய தலைவர்; அவர்களுடைய காரியதரிசியோ திரு. எ. ரங்கசாமி அய்யங்கார். அவர்களுடைய விளம்பர அதிகாரி யாரோவெனில் தூற்றுவதில் கைதேர்ந்தவரும், ஆணவத்துடன் உளறுபவரும் பார்ப்பனரல்லாதார் கட்சியை சமுத்திரத்தில் ஐந்தடி ஆழத்திற் புதைத்துவிடுவதாகச் சத்தியஞ் செய்துள்ள பிணக்குழிவெட்டு வதையே தொழிலாய்க் கொண்டவருமான திரு. சத்தியமூர்த்தி அய்யர். தென்னிந்திய மக்களே! இவர்கள்தான் இந்தியன் நேஷனல் காங்கிரஸின் பேரால் பேசத்துணிந்திருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலத்தில் காங்கிரசுக்குத் துரோகிகளாயிருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொரும் மாபெருந் தலைவர்களாகிய காந்தியடிகளையும் பண்டிதர் மதன் மோகன மாளவியாவையும் லாலா லஜபதிராயையும் மிகவும் இழிவாகப் பேசியிருக்கிறார்கள். இன்று, காங்கிரசில் பல கட்சிகளிருந்தும், பரஸ்பர ஒத்துழைப்பாளரும், தடைவேலை செய்வதாய்ச் சொல்பவர்களும் சுயராஜியக்கட்சியிலும் காங்கிரஸிலுமிருந்தும் தங்களுக்குத் தாங்களே தலைவர்களெனப் பட்டஞ்சூட்டிக் கொண்ட இவர்கள் காங்கிரசின் பேரால் உங்களிடம் ஓட்டுக் கேட்கிறார்கள். அவர்கள் பலவந்தமாய் காந்தியடிகளைப் புறந்தே தள்ளி அவருடைய விருப்பங்களுக்கு மாறாக நடந்து அரசியல் வாழ்விலிருந்து பின் வாங்கிக்கொள்ள அவரை வற்புறுத்திய இவர்கள் இன்று மகாத்மா காந்திக்கு ஜே என்று கூச்சலிடவும் அவருடைய தூய்மையான பெயரைச் சொல்லவும் துணிந்து விட்டார்கள், சென்னை வோட்டர்களே! அரசியல் வாழ்வில் இத்தகைய அயோக்கியத்தனம் இல்லாதபடி ஒழிக்கநீங்கள் ஒன்றுபட்டு முன் வரவேண்டும். நமக்கு சுயாட்சி கிடைக்கலாம். கிடைக்காமற் போகலாம். ஆனால் இது மட்டும் நிச்சயம். இந்த குறுகிய சுய நலக் கூட்டாத்தாருக்கு இடங் கொடுக்கிறவரை, இந்த சுயநல வெறிக்கும் பலுக்குக் கௌரவங் கொடுக்கிறவரை, இந்த பார்ப்பனரல்லாதாருடைய பகைவர்கள் விருப்பம் போல் ஆடி வர விடப்படுகிறவரை சுயாட்சி என்பது கானலாகவேயிருக்கும். நமக்கு ஒரு வேளை சுயாட்சி கிடைத்த போதிலும் அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்தபோது வெளிவந்த நஞ்சைப் போல நஞ்சாகவேயிருக்கும். ஆகவே தேச அபிவிருத்தியில் நீங்கள் உண்மையான கருத்துடையவர்களானல், எல்லா வகுப்பினருக்கும் நீதி வழங்க வேண்டுமென்ற கருத்துடையவர்களானல், எல்லாருக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டுமென்று விரும்புவீர்களானல், தானே வாழவேண்டுமென்ற கொள்கையையும், ஒரு தலைப்பட்சத்தையும், சாதிக் கர்வத்தையும் ஒழிக்க வேண்டுமென்று நீங்கள் கருதுவதானல், மனிதனுக்கு மனிதன் வேற்றுமை காட்டாத, பலஹீனமானவர்களுக்காகவும் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும் போராடி வந்திருக்கிற இன்னும் போராடத் தயாராயிருக்கிற, சென்ற ஆறு ஆண்டுகளுக்குள்ளேயே மக்களிடையில் பெரும் உணர்ச்சியை உண்டு பண்ணிவிட்ட தனிப் பெருங்கட்சியையே நீங்கள் ஆதரிக்க வேண்டும். உங்கள் சகோதரிகள் பாலும் சகோதரர்கள் பாலும் நீங்கள் காட்டும் வாஞ்சையின் பேரால், உங்கள் பெற்றோர்கள் பால் நீங்கள் காட்டும் பக்தியின்பேரால், உங்கள் தாய் நாட்டின் பால் நீங்கள் கொண்டுள்ள அபிமானத்தின் பேரால் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கே திடமாக வோட்டுச் செய்ய முன்வர வேண்டுகிறேம். ஐயம் வேண்டாம். தயங்க வேண்டாம். எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

“திராவிடன்”

## மஹமதிய ஓட்டர்கள் கவனிக்கவேண்டியது

(“சைபுல் இஸ்லாம்” எழுதுகிறது.)

சுயராஜ்யக் கட்சியினர் செய்துவரும் சூழ்ச்சிகளில் முஸ்லிம் சமூகத்தை பாதிக்கும் விஷயங்களை மட்டும் நாம் நமது சமூகத்திற்கு எடுத்து விளக்கி, அவர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி மாய வலையில் சிக்கி மதிமோசம் போகவேண்டாம் என்று முஸ்லிம்களுக்கு நாம் எச்சரிக்கை செய்து வந்தோம். அப்போது பிராமணரல்லாத நண்பர்களில் சிலர் நம்மீது குறை கூறினர்கள். சில சகவர்த்தமானிகளும் குறை கூறின. சில சகவர்த்தமானிகளும் குறை கூறினவென்றாலும் அவைகளுக்கே சுயராஜ்யக் கட்சியின் சூழ்ச்சி வேலைகளும் சுயநல நோக்கங்களும் வெளியான பின் அவைகளும் சுயராஜ்யக் கட்சியின் தலைவர்களுடைய சூழ்ச்சிகளை கண்டிக்க ஆரம்பித்து விட்டன. சகவர்த்தமானி “தமிழ் நாடு” பத்திரிகை இவ்வாரம் தனது தலையங்கத்திலும் உபதலையங்கத்திலும் சுயராஜ்யக் கட்சி தலைவருடைய சூழ்ச்சிகளையும் அற்பத்தனமான வார்த்தைகளையும் விவரமாக வரைந்திருக்கிறது. அவ்வியாசங்களைப் படித்துப் பார்க்கும் நண்பர்களுக்கு சுயராஜ்யக் கட்சியால் தேச மகாசபையாகிய காங்கிரஸ் சபைக்கு எவ்வளவு மதிப்புக் குறைவு ஏற்பட்டு விட்டதென்பதும் சுயராஜ்யக்கட்சி முஸ்லிம் சமூகத்திற்கு மட்டுமின்றி பிராமணரல்லாத இந்து சமூகங்களுக்கும் துரோகம் செய்யக் கூடியதாயிருக்கிறதென்பதும் நன்கு புலப்படும். நாளடைவில் அதில் சம்பந்தப்பட்டிருந்த பிராமணரல்லாதபலர் ராஜிநாமாக்கொடுத்து விலகி வருவதைப் பத்திரிகைகளில் இப்போது மலிந்து கிடப்பதை காணலாம். ஆகையால், அக்கட்சிக்கு சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதாகக் கூறுவது பொருந்தும். நான்கு மாதங்களுக்கு முன் சுயராஜ்யக் கட்சியின் சார்பாகச் சட்ட சபைக்கு அபேட்சகர்களாக நிற்பவர்களை ஆதரித்து ஓட்டுக் கொடுப்பவர்கள் முஸ்லிம் சமூக துரோகிகளாவார்கள் என்று நாம் வரைந்துள்ளோம். அதே பதத்தை இப்போது மௌலானா ஹஸரத் மோஹானி அவர்கள் சுயராஜ்யக் கட்சி விஷயத்தில் உபயோகப் படுத்திக் கூறியிருக்கிறார். சுயநலம் கருதி பொது ஜனங்களை ஏமாற்றித் தங்கள் காரியத்தை முடித்துக்கொள்ள பிராமணர் செய்துவரும் சூழ்ச்சிகளை பாமர ஜனங்களுக்கு விளக்கிக் காட்டி அவர்கள் ஏமாந்து போகாமல் அவர்களுக்கு எச்சரிக்கை செய்யும் பத்திரிகாசிரியர்களையும் பிரசங்கிகளையும் கைது செய்யும்படி ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் அரசாங்கத்தை உதவி தேடி அழைக்கிறார்.

தம்முடைய சூழ்ச்சியைக் கண்டுபிடித்து கண்டித்ததற்காக ஒப்பற்ற தேசத் தொண்டு புரியும் உத்தமத் தலைவர்களையும் பத்திராசியர்களையும் கைது செய்து அவர்களின் தொண்டு தேச மக்களுக்கு இல்லாமற் போகச் செய்ய துணிகிறவர் சுயநலப்புலியா தேசாபிமானியா என்பதை நேயர்களே யூகித்தறியவேண்டும். இவ்வித சுயநலப் பிரியர்கள் தலைமை வகிக்குங் கட்சி மற்ற எந்த சமூகத்திற்கும் நன்மையைச் செய்யாதென்பதை நாம் பன் முறையும் பகர்ந்துள்ளோம். ஆகையால் எமது, முஸ்லிம்களில் அக்கட்சியில் சேர்ந்திருப்பவர்கள் அதை ராஜிநாமா கொடுத்துவிட வேண்டும். அக்கட்சியில் சேர்ந்தவர்களை ஆதரிக்கவும் கூடாது. அவர்களுக்கு ஓட்டுக்கொடுக்கக் கூடாதென்றும் அவ்வாறு அக்கட்சியில் சேர்ந்தவர்களுக்கு ஓட்டுக்கொடுத்து ஆதரிப்பது முஸ்லிம் சமூகத் துரோகமாகுமென்று நமது மௌலானா ஹஸரத் மோஹானி கூறியிருப்பதை நேயர்கள் கவனித்து நடந்து கொள்ளும்படி அவர்களுக்கு நாம் ஆலோசனை கூறுகிறேம்.

## டாக்டர். வரதராஜுலு நாயுடுவுக்குப் பூச்சாண்டி காட்டல்.

ஸ்ரீமான் டாக்டர். வரதராஜுலு நாயுடு சுயராஜ்யக் கட்சியைப் பார்ப்பனர் கட்சி என்றும், அதை ஒழிக்க வேண்டும் என்றும், தேர்தலில் சுயராஜ்யக் கட்சி வெற்றி பெற்றால் பார்ப்பன ஆதிக்கம் ஓங்குவதுடன் பார்ப்பனரல்லாதாருக்கு மீளாத ஆபத்து வரும் என்றும் சொன்னதிலிருந்து நமது பார்ப்பனரும், அவர்களிடம் கூலி பெற்று வயிறு வளர்க்கும் கூலிகளும், பத்திரிகைகளும் டாக்டர் நாயுடுவுக்குப்பூச்சாண்டி காட்ட ஆரம்பித்து விட்டார்கள். அதாவது "நாயுடு சங்கதியை வெளிப்படுத்தப் போகிறோம் அவர் ஜயிலில் நடந்து கொண்டதை வெளிப்படுத்துகிறோம்." என்று என்ன என்னமோ ஈனத்தனமாய் கூச்சல் போடுகின்றார்கள். அப்படியானால் டாக்டர் நாயுடுவின் செய்கை என்ன என்பதை ஒரு கைபார்த்தே விடலாம். சுயராஜ்யக்கட்சித் தலைவர்களைப்போல் கள், சாராயம், பிராந்தி சாப்பிடுகிறாரா? சுயராஜ்யக் கட்சி பிரதானிகள் போல் தேவடியாளைக் கூட்டிக்கொண்டு ஊர் ஊராய்த் திரிகிறாரா? அல்லது போன இடங்களில் எல்லாம் குச்சு புகுந்து அடி பட்டாரா? சாராயம் பிராந்தி விற்றுப் பணம் சம்பாதிக்கிறாரா? பத்திரிகையில் பேர் போடுவதாகவும் படம் போடுவதாகவும் சொல்லிப் பணம்சம்பாதித்தாரா? பத்திரிகைச் செல்வாக்கை உபயோகித்து மடாதிபதிகளிடம் பணம் வாங்கினாரா? மகனுக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டாரா? வாங்கின கடனை ஏமாற்றினாரா? அல்லது வீட்டில் மல்துணியும், பெண்சாதிக்குப் பட்டுச் சல்லா முதலிய அந்நிய நாட்டுத்துணியும் உபயோகித்துக் கொண்டு மேடைக்கு வரும்போது கதர் கட்டிக் கொண்டு வந்து பொது ஜனங்களை ஏமாற்றுகிறாரா? திருட்டுத்தனமாய் சர்க்கார் அதிகாரிகளிடம் கெஞ்சி ஏதாவது தயவு பெற்றுக் கொண்டாரா? மந்திரி உத்தியோகம் வேண்டுமென்று யார் காலிலாவது விழுந்தாரா? பெரிய பெரிய உத்தியோகங்களையும் பதவிகளையும் பெறலாமென்று தனது உத்தியோகத்தை ராஜிநாமாக் கொடுத்து ஜனங்களை ஏமாற்றினாரா? அல்லது இன்னமும் தனக்கு ஏதாவது ஒரு உத்தியோகமோ பதவியோ கிடைக்குமென்று எதிர்பார்க்கிறாரா? எந்த விதத்தில் அவர் "பூனவாக்கை" வெளிப்படுத்தக் கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆதியில் பார்ப்பனரல்லாதார் கட்சி பலமாய் ஆரம்பித்த காலத்திலும், அதைக் கொல்ல இம்பாதிரியே சுக்கிரீவனைப் போலவும், விபூஷணனைப் போலவும், அநுமார்களைப்போலவும், ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடுவையும் கல்யாண சுந்திர முதலியாரையும் மற்றும் பலபேர்களையும் தங்கள் சுவாதீனப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு, ஜாதி குலஅபிமானம் இல்லாமல் செய்தும், அவர்கள் மூலமாய் பார்ப்பனரல்லாதார் கட்சியைத்தலையெடுக்க வொட்டாமல் செய்ய பாடுபட்டதுமல்லாமல், இப்பொழுதும் அவர்களை மிரட்டிப்பூச்சாண்டி காட்டுவதானால் இவர்கள் பூச்சாண்டிக்கு யார்தான் பயப்படுவார்கள். இவர்கள், இவர்களைப் பற்றி வெளியாக்கப் போகும் விஷயம் என்னவென்றுதான் ஒரு கை பார்க்கலாம என்றே தயாராயிருக்கிறோம். இதன் பலனாகவாவது அரசியல் துறையிலுள்ள எல்லாருடைய யோக்கியதையும் வெளியாகக் கூடுமென நினைத்தே அவற்றை மனப்பூர்வமாய் வரவேற்கிறோம்.

---

# 5000 ரூபாய் இனாம்.

தமிழ்நாட்டுச் சார்பாக இந்திய சட்டசபைக்குச் சென்ற தடவை ஒருவர் தவிர எல்லோரும் ஐயங்கார் பார்ப்பனர்களாகவே நின்றார்கள். இந்தத் தடவையும் அதேமாதிரி எல்லோரும் ஐயங்கார் பார்ப்பனர்களாகவே நிற்கிறார்கள். பார்ப்பனரல்லாதார்சார்பாய் இந்திய சட்ட சபைக்கு சென்னை நகரத்தொகுதிக்கு நிற்கும் ஸ்ரீமான் சக்கரை செட்டியாருக்கு விரோதமாய் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் நிற்கிறார். எப்படியாவது ஸ்ரீமான் சக்கரை செட்டியாரை தோற்கடித்துதான் வெற்றிபெற ஆசைப்பட்டு பணம் கொடுத்து ஆள்களைச் சேர்த்து பொய்ப் பிரசாரம் செய்கிறார். இதற்காகத் தன்னைப் பெரிய தியாகி என்று சொல்லச் சொல்லுகிறார். தனக்கு ஓட்டுக் கொடுத்தால் சீக்கிரம் சுயராஜ்யம் வருமென்று சொல்லச்சொல்லுகிறார். ஆனால் ஒருவராவது இதுவரை ஐயங்கார் என்ன தியாகம் செய்தார் என்று சொல்லவில்லை. ஒருவராவது இதுவரை ஐயங்காரின் சுயராஜ்ய திட்டம் இன்னது என்று சொல்லவில்லை. அய்யங்கார் தியாகமெல்லாம் வக்கீல் உத்தியோகத்தில் மாதம் பத்தாயிரம் இருபதாயிரம் சம்பாதித்துப் பணம் சேர்த்து வருவதோடு காலி ஆசாமிகளுக்கும் கொஞ்சம் கூலி கொடுத்து பார்ப்பனரல்லாதார் கட்சியையும், பார்ப்பனரல்லாதார் தலைவர்களையும், திட்டும்படி சொல்லுவதும், கூட்டங்களில் கலகம் செய்யச் செய்வதும் பணம் கொடுத்து பிரசாரம் செய்து காங்கிரஸ் தலைவர் பதவி பெற்றதுமானவை தவிர வேறு என்ன என்ன தியாகங்கள் செய்திருக்கிறார் என்று சொல்லுகிறவர்களுக்கு 500 ரூபாய் இனாம்.

ஸ்ரீமான் ஐயங்காரின் சுயராஜ்ய திட்டம் பார்ப்பனரல்லாத கட்சியை ஒழித்து பார்ப்பனரல்லாத மந்திரிகளைத் தள்ளிவிட்டு அந்த ஸ்தானத்தில் தாங்களும் தங்கள் இனத்தாரும் உட்கார்ந்து கொண்டு, பார்ப்பனரல்லாதார் அநுபவித்து வருவதாய்ச் சொல்லும் அதிகாரங்களையும் வேறு பதவிகளையும், உத்தியோகங்களையும் பிடுங்கிப் பார்ப்பனர்களுக்குக் கொடுத்துப் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதைத் தவிர உண்மையான சுயராஜ்யத் திட்டம் ஏதாவது அவருள்ளத்தில் இருக்கிறதா என்று கண்டுபிடித்துச் சொல்லுகிறவர்களுக்கு 1000 ரூபாய் இனாம். ஸ்ரீமான் ஐயங்காருக்காகப் பிரசாரம் செய்கிறவர்களிலாவது மேடைமேல் நின்று பேசுகிறவர்களிலாவது பத்திரிகையில் எழுதுகிறவர்களிலாவது ஸ்ரீமான் ஐயங்காரிடம்கூலிவாங்காமல்பேசுகிறஎழுதுகிறஒரு நபரையாவதுகாட்டுபவர்களுக்கு 1500ரூபாய்இனாம். இப்போது அவர் கூலி கொடுத்துப் பொய்ப் பிரசாரம் செய்விக்கும் ஆள்களையாவது கூட்டத்தில் கலகம் செய்யச் செய்விக்கும் ஆள்களையாவது நவம்பர் மாதம் 8-ந் தேதி (எலக்ஷன்) ஆன பிறகு கிட்டத்தில் சேர்ப்பார் என்று ரூபிப்பவருக்கு 2000 ரூ. இனாம். சென்னை வாசிகளே சக்கரை செட்டியாரின் தோல்வி பார்ப்பனரல்லாதாரின் தோல்வியாகும். ஐயங்காரின் வெற்றி பார்ப்பன ஆதிக்கத்திற்கு வெற்றி ஆகும் ஆதலால் வீணாகக் கூலிக்கு மாரடிப்பவர்கள் வார்த்தைகளை நம்பி மோசம் போகாதீர்கள்.

---

## "மித்திரன்" பித்தலாட்டம்.

(உடுமலை இராமசாமி நாயுடு)

கனம் பனகால் அரசர் தென்னாப்பிரிக்கா இந்தியர்பால் அநுதாபங்கொண்டு அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திப்பதற் காதரவாக அது சம்பந்தமாக வந்த தென்னாப்பிரிக்கா பிரதிநிதிகளுக்கு ஒரு விருந்து நடத்தினார். அப்பொழுது பிரிட்டிஷ் சம்பந்தத்தால் நமது சுய மரியாதையுள்ள புராதன நாகரிகம் புத்துயிர் பெற்று வருதலைப் பாராட்டிவிட்டு "வர்ணாசிரமதரும" நாகரிகமாகிய "பார்ப்பனீயம்" இன்னுங் கொஞ்சம் இருத்தல்பற்றி இந்தியர்களை அவமதித்துக் கஷ்டப்படுத்தக்கூடாது என தென்னாப்பிரிக்கா தூதர்களுக்கு எடுத்துக் காட்டினார். இதற்கு நமது பார்ப்பன "மித்திரன்" "தேசாபிமான மற்ற மந்திரி" என தலையங்கங் கொடுத்து அற்பத்தனமாகத் தூற்ற ஆரம்பித்துவிட்டான். "மித்திரனின்" புல்லறிவாண்மையைச் சென்றவாரம் நமது "குடி அரசும்" இவ்வாரம் "திராவிடனும்" விளக்கமாக எடுத்துக் காட்டியிருக்கின்றன. காங்கிரஸ்—அதிலும் சுயராஜ்ய கட்சிதான் இந்தியாவின் "வாய்" அது தீர்மானிக்குந் தீர்மானம் தான் பூரண இந்தியத் தீர்மானம் என அல்லும் பகலும் மாரடிக்கும் "மித்திரன்" அமெரிக்கா முதலிய மேல்நாடு சென்று பொய்ப் பிரசாரம் செய்யும் சர். டி. விஜயராகவாச்சாரியாரை ஏன் விட்டுவிட்டான்? ஸ்ரீமான் ஆச்சாரியார் கனடிய தேசிய பொருட் காட்சி சாலையைத்திறந்து வைக்குங் காலத்தில் "இந்தியாவின் கதி மோக்ஷமானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைப்பதைப் பொறுத்தே இருக்கின்றது என்று என்னுடைய தேசத்தாரில் பெரும்பாலோர் நம்புகின்றனர் என்றும் யுத்த காலத்தில் இந்தியா தியாகம் செய்ததுபோல் இன்னும் செய்யத் தயாராயிருக்கிற" தென்றும் சொல்லியிருக்கிறார். இவரைப் பற்றி "மித்திரன்" ஒரு வார்த்தையுங் கூறவில்லை. இவரைப்போல் நமது பனகால் அரசர் வலியச் சென்று பொய்ப் பிரசாரம் செய்தாரா? மேலும் மேலும் ஸ்ரீமான் ஆச்சாரியாருக்குப் பெரிய பெரிய உத்யோகங்கள் கிடைக்கும்படியான ரீதியில் "இந்தியாவின் கதி மோக்ஷமும் ஒத்துழைப்பும்" என அரசாங்கத்துக்கு நல்ல பிள்ளையாகப் படும்படியாகவும் பொது ஜனங்களுக்குப் பரிகாசத் தொனி உணர்ச்சி உண்டாமாறும் தலைப்புக் கொடுத்து அவர் பிரசங்கத்தை "மித்திரன்" சமத்காரமாக வெளியிட்டிருக்கிறான். இதனால் அவர்களுக்குள் பிரிவினைகளும், கொள்கை வேற்றுமைகளும் எவ்வளவு இருந்தாலும் ஜாதி முன்னேற்றத்தில் மாத்திரம் கண்ணுங் கருத்துமாயிருப்பார்கள் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


# குடி அரசு.

அக்ஷய-ஹு புரட்டாசி-மீ 24-உ


## வெற்றி நமதே.

### சட்ட சபைத்தேர்தலில் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு வெற்றி உறுதி.

சென்னை மாகாண சட்ட சபை முதலியவைகளுக்கு இம்மாதம் நாலாம் தேதி அபேக்ஷகர்கள் நியமனம செய்யப்பட்டு விட்டது. அபேக்ஷகர்கள் பற்பல கக்ஷிகளின் பெயரைச் சொல்லிக் கொண்டு நியமனம் பெற்று இருந்தாலும், அவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர் கட்சி, பார்ப்பனரல்லாதார் கட்சி என்னும் இரண்டு கட்சிகளுக்குள்ளாகவே ஐக்கியப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சிலர் இரு கட்சிகளையும் பற்றி லட்சியமில்லாமல் தங்கள் சுயநல மொன்றையே பிரதானமாய்க் கருதி நின்றிருக்கலாம். அதாவது பார்ப்பனரல்லாதார்களில் யார் யார் சுயராஜ்யக் கட்சியின் பேரால் நிறுத்தப் பட்டிருக்கிறார்களோ அவர்களில் பெரும்பாலோர் சுய நலத்தை உத்தேசித்தே அக்கட்சியின் பெயரை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக சுயராஜ்யக் கட்சியில் இருக்கும் பார்ப்பனரல்லாதார் ஆகிய ஸ்ரீமான்கள் முத்தைய முதலியார் துளசிராம் போன்ற பலரைச் சொல்லலாம். இவர்கள் முதலில் ஜஸ்டிஸ் கக்ஷியில் இருந்து மனஸ்தாபத்துடன் விலகினவர்கள். இப்போது சுயராஜ்யக் கட்சியின் பெயரைச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதற்குக் காரணம் இதுசமயம் பார்ப்பனர் தயவில்லாமல் சட்டசபைக்கு வரமுடியாது என்கிற பயமும், எதிர்க் கட்சியில் இருந்து விட்டினால் ஜஸ்டிஸ் கட்சியார் பயந்து கொண்டு ஏதாவது உத்தியோகம் கொடுக்க மாட்டார்களா என்கிற தந்திரமும் தான். பார்ப்பனர்களும் எப்படியாவது யாரைக் கொண்டாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்துவிடவேண்டும் என்கிற கொள்கையுடையவர்களாயிருப்பதால், அங்கு யார் சண்டை போட்டுக்கொண்டு வருகிறவர்களானாலும், அவரைப் பூரண கும்பத்துடன் வரவேற்கிறார்கள். மற்றும் பலர் தாங்கள் இதுசமயம் சுயராஜ்யக் கட்சிப் பெயரைச் சொல்லிக்கொண்டால் பார்ப்பனர் உதவிசெய்து சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கச் செய்துவிடுவார்கள்; பிறகு எப்படி வேண்டுமானாலும் திரும்பிவிடலாம் என்கிற எண்ணத்தின் பேரிலேயே அந்தக் கட்சியின் பெயரைத் தற்கால சாந்தியாகச் சொல்லிக்கொண்டு நின்றிருக்கிறார்களே அல்லாமல் உண்மையான கட்சிப்பற்று என்று சொல்லவே முடியாது. மற்றும் பலருக்கு எந்தக் கட்சியின் பெயரையும் சொல்லிக்கொள்வதற்கு தைரியமில்லாதவர்களாகி ஒரு கட்சியிலும் சேராதவர்கள் என்று சொல்லிக்கொண்டு சுயேச்சை வாதிகளாக நின்றிருக்கிறார்கள்.

இம்மாதிரி இதுவரை, சென்னை சட்ட சபைக்குப் பொதுத்தேர்தலில் நின்றதல்லா அபேக்ஷகர்களிலும் 64 பேர் சுயராஜ்யக் கட்சி காங்கிரஸ் கட்சி என்றும் சொல்லிக் கொள்பவர்கள்; 56 பேர் ஜஸ்டிஸ் கட்சி என்றும் 61 பேர் சுயேச்சை வாதிகள் என்றும் சொல்லிக்கொள்பவர்களாக நின்றிருந்த போதிலும், சுயராஜ்யக் கட்சித் திட்டத்தின்படி பணம் கொடுத்து முச்சலிக்காவில் கையெழுத்துச் செய்திருப்பவர்கள் 10 அல்லது 15 பேர்கூட இருக்கமாட்டார்கள். அன்றியும் எலெக்ஷன் நடப்பதற்குள்ளாகக் கட்சி மாறுகிறவர்கள் பலர் இருக்கலாம். எலக்ஷன் ஆனவுடன் மாறுகிறவர்கள் பலர் இருக்கலாம். உதாரணமாக ஸ்ரீமான்கள் திருச்சி சேதுரத்தினமய்யர், டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் போன்றவர்கள் நாட்டில் சுயராஜ்யக் கட்சிக்குச் செல்வாக்கிருக்கிறது என்கிற எண்ணத்தின் பேரில் சுயராஜ்யக் கட்சித் திட்டத்தில் கையொப்பமிட்டு ரூபாயும் கொடுத்தவர்கள்; இப்போது அக்கட்சிக்கு தேசத்தில் செல்வாக்கு இல்லை என்று தெரிந்தவுடன் தங்களை சுயேச்சைக் கட்சியார்கள் என்று விளம்பரப் படுத்திக் கொண்டார்கள். எப்படி இருந்தபோதிலும் சட்ட சபைகளில் சுயராஜ்யக் கட்சி என்கிற பார்ப்பனர் கட்சியும் ஜஸ்டிஸ் கட்சி என்கிற பார்ப்பனரல்லாதார் கட்சியும் தன் தன் நோக்கங்களை நிறைவேற்றும்போது பார்ப்பனர்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்குத்தான் ஓட்டுச் செய்வார்கள். பார்ப்பனரல்லாதார் பெரும்பாலும் சிலர் தவிர மற்றவர்கள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்குத்தான் ஓட்டுச் செய்வார்கள் என்பது உறுதி. உதாரணமாக தேவஸ்தான மசோதா வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானம் முதலியவைகளில் ஸ்ரீமான்கள் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் ஆகியவர்கள் செய்கையைப் பார்க்கலாம். இதுபோலவேதான் சுயேச்சை வாதிகள் என்பாருள் பெரும்பாலோரும் நடந்து கொள்ளுவார்கள். ஆதலால் சுயேச்சை வாதிகளில் உள்ள பார்ப்பனர்களை சுயராஜ்யக் கட்சியிலும், பார்ப்பனர் அல்லாதாரை ஜஸ்டிஸ் கட்சியிலும் சேர்த்துத்தான் கணக்குப் பார்க்கவேண்டும். மற்றும் தேர்தல் ஆனபிறகு சிலபேர் சுயராஜ்யக் கட்சியில் இருந்தும் மெல்ல மெல்ல சுயேச்சை வாதியாகி கடைசியாக ஜஸ்டிஸ் கட்சிக்கு வரக்கூடும். ஏனெனில் இதுசமயம் சுயராஜ்யக்கட்சி என்கிற பார்ப்பனர் கக்ஷிக்குத்தான் பிரசாரம் செய்யவும் மக்களை ஏமாற்றவும் பத்திரிகைகளும் மடாதிபதிகள் பணமும் கூலி ஆட்களும் தாராளமாய் இருப்பதால் அதன் பெயரைச் சொன்னால்தான் அநுகூலங் கிடைக்குமென்று நம்பும்படியாக நமது பார்ப்பனர்கள் பொய்ப் பிரசாரம் செய்து விட்டதால் இப்போது அந்தப்படி சொல்லிக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் சுயேச்சை வாதிகளிலும், சுயராஜ்ஜியக் கக்ஷியாரிலும், பலபேர் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு வந்து சேருவார்கள் என்று எதிர் பார்ப்பதுபோல் ஜஸ்டிஸ் கக்ஷியிலிருந்து சுயராஜ்ஜியக் கக்ஷிக்கு யாராவது வந்து சேருவார்களா என்று எதிர் பார்க்க முடியாது. இதை ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் பார்ப்பனப் பத்திரிகைகளும் ஒப்புக்கொள்ளுகின்றன. ஏனெனில் அப்படிச் சேருகிறவர்களாயிருந்தால் இப்போதே பார்ப்பனர் விளம்பரங்களைக் கண்டுமயங்கிப் போய் அதில் சேர்ந்திருப்பார்கள். ஆதலால் பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வளவு ஜாலவித்தை செய்தாலும் எவ்வளவு பொய்ப் பிரசாரம் செய்தாலும் அடுத்துக்கூடும் சட்ட சபை பார்ப்பன ஆதிக்கத்திற்கு உலை வைக்கக்கூடியதாகத்தான் முடியும். நமது பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து எத்தனையோ பார்ப்பனரல்லாத ஆட்களைச் சுவாதீனம் செய்து பார்த்தார்கள். ஒரே நிலையாய் ஒரு வருஷமாவது பார்ப்பனரோடு இருந்த ஒரு பார்ப்பனரல்லாதார் பெயரையாவது கண்டு பிடிக்கக் கூடுமானால் பார்ப்பனரல்லாதாரால் பார்ப்பன ரல்லாதார் கட்சியைக் கெடுக்கக் கூடும் என்று நினைக்கலாம். இதுவரை பார்ப்பனர்கூடச் சேர்ந்திருந்த பார்ப்பனரல்லாதார் எல்லோரும் பார்ப்பனர் யோக்கியதை அறிந்து ஒவ்வொருவராக வெளி வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இனியும் வெளி வரத்தக்க ஆட்கள் தான் அவர்களோடு இருக்கிறார்களே தவிர அவர்களுக்கு அனுகூலமாக யோக்கியமுள்ள ஒருவராவது இதுசமயம் அவர்களிடம் இல்லை. உதாரணமாகச் சென்னை பார்ப்பன பிரசங்க மேடைகளில் இருக்கும் ஆட்களை கவனித்துப் பார்த்தாலே தெரியவரும். ஆகையால் வரப்போகும் தேர்தலின் முடிவானது சென்ற வருஷம் பார்ப்பனரல்லாதார் கட்சியில் இருந்த சட்ட சபை மெம்பர்களின் எண்ணிக்கையைவிட குறைந்தது 10 அங்கத்தினராவது அதிகமாயிருக்குமே தவிர எவ்விதத்திலும் குறையாது. வீணாக ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தியின் "புரட்டையும்" சுதேசமித்திரனின் "புழுகையும்" கண்டு யாரும் மயங்க வேண்டியதில்லை என்றும், எந்த விதத்திலாவது அடுத்த வருஷத்திய சட்ட சபையில் பார்ப்பனர் கை உயர்ந்துவிடுமோ என யாரும் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் உறுதி கூறுவோம்.

# யாருக்கு ஓட்டு கொடுப்பது.

(சித்திர புத்திரன்.)

ராஜு:—என்னப்பா சுந்தரம் சட்டசபை எலக்ஷன் வந்துவிட்டதே கண்டவர்கள் எல்லாம் அபேக்ஷகராய் நிற்கிறார்களே இவர்களில் யாருக்கு ஓட்டுப் போடுவது.

சுந்தரம்:—யாருக்கோ ஒருவருக்குப் போட்டால் போகிறது. நாம் என்ன ஒத்துழையாதாரா! யாருக்கும் போடுவதில்லை என்று சொல்லுவதற்கு; அதெல்லாம் மலையேறிப் போய்விட்டது. இப்பொழுது எல்லாம் ஒத்துழைப்பே ஏற்பட்டதோடு ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஒத்துழைப்பதாய்ப் போய்விட்டது.

ராஜு:—நீ சொல்லுவது சரிதான் ஆனாலும் அதிலும் தாரதம் இல்லையா?

சுந்தரம்:—தாரதம் என்ன சுயராஜ்ஜியக் கக்ஷிக்காரருக்குத்தான் போட்டுவிடே

ராஜு:—அதென்ன அவ்வளவு அசார்சமாய்ச் சொல்லுகிறாய் சுயராஜ்ஜியக் கட்சி என்றால் என்ன அதன் கொள்கை என்ன! அதன்றி வேறு கட்சிகள் என்ன என்ன இருக்கிறது. இவைகள் தெரிய வேண்டாமா?

சுந்தரம்:—ஓ ஹோ! இதுவே இன்னமும் உனக்குத் தெரியாதோ சரி சரி; நீ சரியான தற்குறிபோல் இருக்கிறாய். சுயராஜ்ஜியக் கட்சி என்பது அரசியல் கட்சி என்று பெயர் அது முதலில் ஒத்துழையாமை கொண்ட மகாத்மா காங்கிரசுக்கு விரோதமாய் மகாத்மா ஜெயிலில் இருக்கும் சமயம் பார்த்து நமது பார்ப்பனர்கள் அதைக் கொல்லுவதற்கென்றே தேசபந்து தாஸ் என்கிற ஒரு பார்ப்பனரல்லாத நபரை முன்னால் வைத்துக்கொண்டு ஆரம்பித்த கட்சி. தேசபந்து தாசுக்கு ஒத்துழையாமையின் பலனாய் கொஞ்சம் செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. அதை நமது பார்ப்பனர்கள் இதற்கு அவரை உபயோகப் படுத்தும்படி செய்து விட்டார்கள். வெளியில் வந்த மகாத்மாவும் தேசபந்து தாஸை எதிர்க்க இஷ்டமில்லாததால் தாக்ஷண்ணியத்திற்குக் கட்டுப்பட்டு கொஞ்சங்கொஞ்சமாக விட்டுக் கொடுத்துக்கொண்டே வந்து கடைசியாக தானும் விலகிவிட்டார். இதன் மத்தியில் தாஸரும் செத்துப் போனார். கடைசியாக இந்த சுயராஜ்ஜியக் கட்சி என்பது " நமது பார்ப்பனர்கள் கைக்கே வந்து சேர்ந்தது. அவர்கள் இதை சர்க்காரை எதிர்ப்பதற்கு என்று சொல்லிக்கொண்டு பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆக உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் சுயராஜ்யக்கட்சி என்பது. மற்றொரு கட்சி ஜஸ்டிஸ் கட்சி என்று ஒன்று இருக்கிறது. அது ஆதியில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு ஆக இரண்டு உத்தம தேசபக்தர்களான ஸ்ரீமான்கள் டி. எம். நாயர் அவர்களாலும் சர். பி. டி. தியாகராய செட்டியாராலும் ஏற்பட்டது. இதற்கும் நமது பார்ப்பனர்கள் ஒத்துழையாமையை கொல்ல செய்த சூழ்ச்சி போலவே ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு கல்யாண சுந்தர முதலியார் என்கிற சில பார்ப்பனரல்லாதாரைச் சேர்த்துக்கொண்டு அவர்களைத் தலைவர்களாக்கி அவர்கள் மூலமாகவே அவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து இதையும் கொல்லப் பார்த்தார்கள். என்ன செய்தும் அவ்வளவோ தத்துக்கும் ஆபத்துக்கும் தப்பி பார்ப்பனரல்லாதார் என்கிற ஒரு கூட்டம் தென்னாட்டிலிருக்கிறது என்றும், அவர்களும் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் உலகம் அறியச் செய்ததோடு மக்களுக்குச் சுயமரியாதை என்று ஒன்று இருக்கிறது. அதை அடைவதுதான் மக்களின் பிறப்புரிமை என்று போதித்து பார்ப்பனர் ஏகபோகமாய் அனுபவிக்கும் அரசாங்க அதிகாரம் ஆதிக்கம் பதவி உத்தியோகம் முதலியதுகளில் சிலதாவது பார்ப்பனரல்லாதாருக்கும் கிடைக்கும்படி செய்ததல்லாமல் பார்ப்பனரல்லாத பெரும்பான்மையான மக்களான ஒடுக்கப்பட்டவர்கள் முதலானவர்களுக்கும் ஒரு உணர்ச்சியை உண்டாக்கி அவர்களையும் மனிதராக்கப் பாடுபட்டு வருகிறது. இதுதான் ஜஸ்டிஸ் கட்சி என்பது; சுயேச்சை கட்சி என்பது தனித்தனி மனிதனுக்கு ஒவ்வொரு கட்சி என்று அர்த்தம் சமயம்போல் பார்த்துக் கொள்ளுவதுதான் இதன் கொள்கை ஆகிய இக்கட்சிகள்தான் இப்போதைய தேர்தல் உலகத்தில் அடிபடுகிறது.

ராஜு:—அப்படியானால் என்ன ஆதாரத்தைக் கொண்டு சுயராஜ்ஜியக் கட்சிக்கு ஓட்டு போட்டால் போகுது என்று சொன்னாய்.

சுந்தரம்:—ஆதாரம் ஒன்றுமில்லை காங்கிரஸ் சுயராஜ்ஜியம் சர்க்காரை எதிர்த்தல் என்கிற வார்த்தைகளைச் சொல்லுகிறார்களே அதனால் அதற்குப் போட்டால் போகுது என்று சொன்னேன்.

ராஜு:—நீ என்ன சுத்தப் பயித்தியக்காரனாய் இருக்கிறாய்! காங்கிரஸ், சுயராஜ்ஜியம் சர்க்காரை எதிர்த்தல் என்று எவராவது வாயில் சொல்லிக் கொண்டால் அவருக்கு ஓட்டுப் போடுகிறதா? இதற்கா நமது பெரியோர்கள் நமக்கு ஓட்டு வாங்கிக்கொடுத்தார்கள். நீயே இப்படி நினைத்தால் சாதாரண பாமர ஜனங்கள் என்ன நினைக்கமாட்டார்கள். சுயராஜ்ஜியம் என்றால் என்ன சர்க்காரை எதிர்ப்பது என்றால் என்ன? இதற்கு உதவும்படியான கொள்கை ஏதாவது அவர்களிடம் இருக்கிறதா? இதுகளை யோசிக்க வேண்டாமா? முதலிலேயே சுயராஜ்ஜியக் கட்சி பார்ப்பனரிடம் சிக்கிக் கொண்டது என்று சொல்லி விட்டாய் பார்ப்பனர்கள் எல்லோரும் சர்க்கார் உத்தியோகத்திலும் வக்கீல் உத்தியோகத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் எப்படி சுயராஜ்ஜியத்திற்குப் பாடுபட சம்மதிப்பார்கள். நமக்கு உண்மையான சுயராஜ்ஜியம் வருமானால் இம்மாதிரி சர்க்கார் உத்தியோகங்களும் ஒழிந்து போகும் கோர்ட்டுகளும் ஒழிந்து போகும். அப்பொழுது இப்பார்ப்பனர்கள் தர்ப்பைப்புல்லைக் கொண்டுதான் பிழைக்க வேண்டிவரும். ஜஸ்டிஸ் கட்சியின் பலனாய் தர்ப்பைப் புல்லுக்கும் நமது நாட்டில் செலாவணி குறைந்துபோய் விட்டது. ஆதலால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பார்பனர்கள் சுயராஜ்யத்திற்கனுகூலமாயிருக்கமாட்டார்கள் சர்க்காரை எதிர்ப்பது என்பதோ சுத்தப் புரட்டு; சர்க்காரை எப்படி எதிர்ப்பது கத்தி கொண்டா? துப்பாக்கி கொண்டா? எப்படி எதிர்க்க முடியும். சட்ட சபையில் போய் கத்தினால் யார் கேட்கிறார்கள்; வாய் வலிப்பதுதான் மீதியே அல்லாமல் காரியம் ஒன்றும் பலியாது. உண்மையாக சர்க்காரை எதிர்க்கவேண்டுமானால்—சர்க்காரை பணியச் செய்யவேண்டுமானால் ஒத்துழையாமை சட்ட மறுப்பு ஆகியவைகளைத் தவிர மற்ற வழிகளில் எதிர்ப்பதாகச் சொல்லுபவர்கள் ஒண்ணாம் நம்பர் திருட்டு ஆசாமிகள் என்றே நினைத்துக் கொள். ஒத்துழையாமைக்காவது சட்ட மறுப்புக்காவது இந்தப் பார்ப்பனர்கள் ஒருக்காலும் முன்வர மாட்டார்கள். உதாரணம் வேண்டுமானாலும் பார்த்துக்கொள். ஒத்துழையாமையைச் சட்ட விரோதம் என்று சொன்னவர்களும், ஒத்துழையாமைக்கு உலைவைத்தவர்களும், சட்ட மறுப்பின் போது தலைமறைவாய்த் திரிந்தவர்களும், மக்கள் கூட்டம் கூட்டமாய் ஜெயிலுக்குப் போய்க்கொண்டிருந்த காலத்தில் மாதம் 1000, 2000, 10000 ரூபாய் சம்பாதித்துக்கொண்டு உல்லாசமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களும் நமது பார்ப்பனர்களே ஆவார்கள். அவர்கள்தான் இப்போது சர்க்காரை எதிர்க்கிறோம் என்று சொல்லுகிறவர்கள். இவைகளை எப்படி நம்புவது? இதுவரை நான் உன்னை பகுத்தறிவுள்ளவன் என்று நினைத்திருந்தேன் நீ என்ன சுத்த சூன்னியனாயிருக்கிறையே!

சுந்தரம்:—சரி சரி நீ சும்மா திட்ட வேண்டாம். நாம் இரண்டு பேருமே யோசிக்கலாமே; யாருக்குத்தான் ஓட்டுப் போடலாம் சொல் பார்ப்போம்.

ராஜு:—அரசியல் விஷயமாய்ப் பேசினால் ஒத்துழைப்பு, ஒத்துழையாமை என்கிற இரண்டு நிலைமைகள் தான் உண்டு. அரசியல் இயக்கம் என்று சொல்லப்படும் காங்கிரசில் ஒத்துழையாமை திட்டம் இல்லை என்றால் மரியாதையாய் ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் யோக்கியமானது. இதற்குமத்தியில் மத்தியஸ்தம் ஒன்றும் கிடையாது. உண்மையான சுயராஜ்யம் ஒத்துழையாமையினாலல்லது எந்த வழியிலும் ஒத்துழைப்பின் மூலம் வரவேவராது. சட்ட சபைக்குள் நுழைவது கலப்பில்லாத ஒத்துழைப்பே தவிர வேறல்ல. ஆதலால் சர்க்காரை எதிர்க்கிறேன். எனக்கு ஓட்டுக்கொடு என்று சொல்லுகிற பொய்யனை விட சர்க்காரோடு ஒத்துழைக்கிறேன் "எனக்கு ஓட்டுக்கொடு" என்று சொல்லுகிற மெய் பேசுகிறவனே யோக்கியன் என்று சொல்லுவேன். அல்லாமலும் இதுசமயம் சுயராஜ்யக் கட்சி மூலமோ வேறு எந்தக் கட்சி மூலமோ அரசியல் சம்பந்தமான எதையும் எதிர்பார்க்க முடியாது. மற்றபடி இது சமயம் மக்களுக்கு வேண்டியது சமத்துவமும், சுயமரியாதையும் என்பதை நீ மறுக்கமாட்டாய். அந்தப்படி சமத்துவம் சுயமரியாதை என்பதை எந்தக் கட்சியின் மூலமாய் அடையலாம் என்று பார்த்தால் இவைகள் கண்டிப்பாய் சுயராஜ்யக் கட்சியின் மூலம் அடையமுடியவே முடியாது.

சுந்தரம்:—அதென்ன அப்படிச் சொல்லுகிறாய் சுயராஜ்யக் கட்சியார் அதற்கு விரோதமாய் இருக்கிறார்களா?

ராஜு:—உனக்குத் தெரியாதா? கட்சியின் பேரால் தேவஸ்தான மசோதாவை எதிர்க்கவேண்டுமென்று உத்திரவு போட்டார்களே அதன் அர்த்தமென்ன? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசவே கூடாது என்கிறார்களே அதன் அர்த்தமென்ன? மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை யென்று தீர்மானம் செய்தவுடன் காங்கிரஸ் கமிட்டியில் ராஜீனாமாச் செய்தார்களே அதன் அர்த்தமென்ன? பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்துவிட்

## செங்கற்பட்டு ஜில்லா வாசிகளுக்கு.

—————:0:—————

சேமமேவு செங்கற்பட்டு ஜில்லா வாசிகா ளிதோ
தாமரைப் பதம்வணங்கி தமியேன் சொல்வ கேண்மினே!
தூமகேது வான பார்ப்பார் சொற்கோளாது தூயநம்
ராமசாமி முதலியார்க்கே நல்கிர்! ஓட்டு நல்குமின் 1.
சாமதான பேததண்டம் என்னும் நான்குபாயமும்
தூமகேது வான பார்ப்பார் சூழ்ச்சிசெய்து வழங்குவார்
காமர் சென்னை ராஜதானி காசினிக்கண் ஓங்கிட
ராமசாமி முதலியார்க்கே நண்பிர்! ஓட்டு நல்குமின் 2.
ஓங்கு 'ஜஸ்டிஸ்' கட்சிக்குற்ற ஊனும் உயிரும் ஆனவன்
வீங்கு தோள்வில் விசயனொத்த விரதீர மேன்மகன்
நான்கு திக்கும் விசுகீர்த்தி ராமசாமி முதலிநற்
பாங்கனுக்கே பதிவு செய்வீர் பதிவு செய்விர் ஓட்டரோ! 3.
வீரன்ராம சாமிவெற்றி மேவிடா வகையெலாம்
தீரனை சீனிவாசஸன் செய்வதீ ரறியிரோ?
பாரனைத்தும் நகைக்குமாறு பார்ப்பார் வெற்றி பெற்றிடில்
சூரரான தமிழர்மானம் தொலையுங்காலம் ஆகுமே. 4
நான்குகோடி. நம்மவர்கள் நலமும்மற்றும் வாழ்வெலாம்
தாங்கி நிற்கும் நாயகன் சமர்த்தன்ராம சாமியாம்
காங்கிரசு காரரான கபடர் வெற்றி பெறுவரேல்
நீங்கலாத பழிநுமக்கே நேரலாகு மாகுமே. 5.
நம்மனோர்கள் எட்டுக்கோடி நயனம் நண்பிர்! உங்கள்மேல்
இம்மியும் இமைத்தலின்றி இயைந்து நிற்ப தெண்ணுமின்
அம்மவோ! அந்நயனகோடி அழுகணிர் விடாவகை
செம்மலெங்கள் ராமசாமி ஜெயிக்குமாறு செய்கவே. 6.
பார்ப்பனர்க் கடங்கியாடும் பாவைகட்கே ஓட்டு நீர்
சேர்ப்பிராகில் தமிழர் வாழ்வு சேம வாழ்வாகாதரோ!
வேற்பிடித்த முருகனொத்த வீராம சாமியாம்
தார்ப்படைத்த மார்பனுக்கே தருவிருங்கள் ஓட்டரோ. 7.
தெக்கணத்து மக்களெல்லாம் தேவவாழ்த்துப் பாடுவார்
எக்கணத்தும் தமிழர் உம்மை எத்தி உச்சிசூடுவார்
முக்கணாப்பன் அருளுமக்கே முற்றுமாக நாடுவார்
நற்குணத்திர்! வெற்றிமாலை ராமசாமி சூடினே. 8.

எஸ். முத்துசாமிப் பிள்ளை,
"வஞ்சிகேசரி" ஆசிரியர், திருவனந்தபுரம்.

## தமிழ் நாட்டிலிருந்து "மற்றொரு இந்தியத் தலைவர்."

பண்டித மோதிலால் நேரு அவர்கள் தனக்கு அசௌகரியம் ஏற்படும் போதெல்லாம் நம் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களில் ஒருவரைத்தான் பதில் (ஆக்டிங்) தலைவராய் நியமிப்பது வழக்கம். அதுபோலவே சென்ற வாரமும் தனக்கு லாகூரில் இருக்க சவுகரியமில்லாததால் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரிகளை வந்து தனது ஸ்தானத்தை ஒப்புக்கொள்ள அழைத்து இருக்கிறார். முதல்தடவை ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு அழைப்பு வந்தது. மறுதடவை ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்காருக்கு அழைப்பு வந்தது. மூன்றாந் தடவை ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரிகளுக்கு அழைப்புவந்திருக்கிறது. இனி நான்காந் தடவை கும்பகோணம சக்கரவர்த்தி ஐயங்காருக்கு அழைப்பு வருமென்று எண்ணுகிறோம். "இந்தியாவின்பாக்கியமே பாக்கியம்; அதிலும் தமிழ் நாட்டின் பாக்கியமே பாக்கியம்".

## தமிழ்நாடு தாழ்த்தப்பட்டவர்கள் 1.வது மஹாநாடு.

சேலத்தில் தமிழ்நாடு தாழ்த்தப்பட்டவர்களின் 1.-வது மஹாநாடு 1926ஹு அக்டோபர்-மீ 24உ-ல் கோவை ஸ்ரீமான் ஆர். வீரையன் எம். எல் சி. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். தமிழ் நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாக வரலாம். அங்ஙனம் வருவோர் 8-அணா கட்டணம் செலுத்த வேண்டும். சேலம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுகார் டெலிகேட்டுகளுக்கும் ஏழை தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கட்டணம் கட்ட முடியாதவர்களுக்கும் இலவசமாகச் சாப்பாடு போடுவதாக அன்புடன் இசைந்துள்ளார். தாழ்த்தப்பட்டவர்களில் தலைவர்களும் ஏனைய பிரமுகர்களும் வந்து முக்கிய தீர்மானங்களும் சொற்பொழிவுகளும் நடைபெறும். உபசரணைக் கழகத்தார் வரும் பிரதிநிதிகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்திருக்கிறார்கள். சேலம் மூன்று ரயில்வே ஸ்டேஷன்களில் டவுன் ஸ்டேஷனுக்கு டிக்கட் வாங்கல் நலம்.

குறிப்பு:—மஹா நாட்டின் விஷயமாய் எழுதும் கடிதங்களெல்லாம் காரியதரிசியின் விலாசத்திற்கே எழுத வேண்டியது என காரியதரிசி ஸ்ரீமான் பி. வி. நயினான் அறிவிக்கிறார். (பிர்ம ஞான சபை வசந்தா ஹால் சேலம்.)

---

டால் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொன்னார்களே அதன் அருத்தமென்ன? குருகுலத்தில் மக்கள் எல்லோருக்கும் சம உரிமை கொடுக்கவேண்டும் என்று மகாத்மா சொல்லியும் கேட்காமல் அது அவரவர்கள் இஷ்டம் என்றார்களே அதன் அருத்தமென்ன? தீண்டாமை விலக்கைப்பற்றியோ சமத்துவத்தைப்பற்றியோ சுயராஜ்யக் கட்சியில் பேசக்கூடாது என்று தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பலதடவை சொல்லியிருக்கிறாரே அதன் அருத்தமென்ன? பார்ப்பனப் புரோகிதனைக் கூப்பிட்டாலும், கூப்பிடாவிட்டாலும் அவனுக்குப் பணம் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்று பம்பாய் சட்ட சபையில் சொன்னார்களே அதன் அருத்தமென்ன நாங்கள் அனுபவிக்கும் அரசியல் சீர் திருத்தம், எல்லைப்புற மகமதியர்கள் அனுபவிக்கக்கூடாது என்று எதிர்த்தார்களே அதனுடைய அருத்தமென்ன. பார்ப்பனர்கள் அனுபவிக்கும் உத்தியோகங்களைப் போலவே பார்ப்பனரல்லாதாரும் அந்தக் கணக்குப்படி அனுபவிக்கவேண்டுமென்றால் அதை வகுப்பு துவேஷம் என்கிறார்களே அதன் அருத்தமென்ன

உனக்கு இன்னம் இதுபோல் எவ்வளவு சங்கதி வேண்டும்.

சுந்தரம்:—அப்படியானல் யாருக்கு ஓட்டு செய்யலாம் என்கிறாய்.

ராஜு:—நீ தான் சொல்லேன்.

சுந்தரம்:—சொல்லுவதென்ன இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் அரசியல் சுதந்திரத்திற்கு கவலைப்படுவதில் யாதொரு பிரயோசனமும் இல்லை என்று தீர்மானமாய் விட்டது.

சமூக சமத்துவமும், சுய மரியாதையும் அடைய வேண்டுமானல் ஜஸ்டிஸ் கட்சியினல்தான் முடியும்; தேவஸ்தான சட்டம் வகுப்புவாரி உரிமை முதலிய விஷயங்களில் அக்கக்ஷியார் கொள்கை என்ன என்பது விளக்கமாய்ப் போய் விட்டது. இவைகளை நடத்திவைக்க வேண்டுமானல்சட்டசபைக்குள்செல்லவேண்டியதும் பல உத்தியோகங்களைஏற்றுக்கொள்ளவேண்டியதும், சர்க்காரோடு ஒத்துழைக்கவேண்டியதும் மிகவும் அவசியமானதாகும். இக்காரியங்களை ஜஸ்டிஸ் கட்சி கண்ணியமாய் ஒப்பிக் கொள்ளுகிறது; ஆதலால் ஓட்டுச்செய்வதாயிருந்தால் ஜஸ்டிஸ் கட்சிக்குத்தான் ஓட்டு செய்யவேண்டும். ஒத்துழையாமைக்காராயிருந்தால் யாருக்கும் ஓட்டு செய்ய வேண்டியதில்லை. இந்த இரண்டு மார்க்கத்தைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று எனக்கு தோன்றுகிறது.

ராஜு:—உனக்கு மாத்திரம் தோன்றுவது என்பது என்ன புத்திசாலிகளுக்கும்; யோக்கியர்களுக்கும் இது தான் தோன்றும், ஆதலால் அதுவே சரி.

சுந்தரம்:—எலக்ஷன் நாள் கிட்ட நெருங்கி வருகிறது இதை பாமர ஜனங்கள் அறியும்படியும் பார்ப்பனர்கள் ஏமாற்றுதலில் விழுகாதபடிக்கும் செய்ய வேண்டியது நமது கடமை ஆதலால் நான் அந்த வேலையை ஏற்றுக் கொள்ளுகிறேன் எனக்கு உத்திரவு கொடு நமஸ்காரம்.

ராஜு:—சரி போய்விட்டுவா உஷார்! உஷார்!! ஜாக்கிரதை!

# சோழவந்தான்
## தேசிய தருமப் பள்ளிக்கூடத்தின் இரண்டாவது ஆண்டு அறிக்கை
### 1925—26.

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய செல்வங்களில் கல்விச் செல்வம், பொருட்செல்வம் என இரு வகைப்படும். அவற்றுள் கல்விச் செல்வம் இருவகைத்தாயிருக்கிறது. ஒன்று இலக்கிய இலக்கணக் கல்வியாகிய பாஷைக் கல்வி, மற்றொன்று ஆன்மார்த்த அறிவுக் கல்வி. கைத் தொழில் செய்யவேண்டியவன் உகை சரித்திரத்தை வாசித்தால் யாது பயனடையக்கூடும்? அனுவசியமானதும் பின்னால் கற்போனுக்கு அவசியமான பலனை யளிக்கக்கூடாததுமான கல்வியால் ஒருவன் பயனடைவதற்கு பதிலாக தீமையையே யடைவான். இதுபோழ்து நம் நாடு அடைந்திருக்கும் பரிதாபமான ஏழ்மை நிலைமைக்குக் காரணம், நாம் தற்சமயம் அனுசரிக்கும் இரண்டுமற்ற கல்வி முறையே யாகும்.

முதல் முதல் நம் நாட்டார்க்கு ஆங்கில பாஷை கற்பிக்கப்பட்டபோது துரைத்தன பாடசாலைகளே ஸ்தாபிக்கப்பட்டு பெரும்பாலும் இலவசமாகவே கற்பிக்கப்பட்டு வந்தது பிறகும் நெடுநாள்வரை கொஞ்சம் ஏழையாயுள்ளவர்களுக்கெல்லாம் இலவசமாகவும் அரைச் சம்பளத்திற்கும் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் ஆங்கிலம் கற்பிக்கப்பட்டதற்குக் காரணம் துரைத்தன காரியங்கள் நடைபெறுவதற்காகவே. மேல்நாட்டுக் கல்வி ஏற ஏற நம்மவர்கள், மேற்பகட்டான உடைகளையணிந்து துரைத்தனத்தாரிடம் சேவகம் செய்வதே மிக்க கௌரவமான தொழில் என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டார்கள். மற்ற விவசாயம், வர்த்தகம் கைத்தொழில் முதலிய உத்தமமான தொழில்களனைத்தும் இழிவான தொழில்களென்று மதிக்கத் தொடங்கிவிட்டார்கள். பரம்பரையாய் விவசாயம் கைத்தொழில் செய்துகொண்டிருந்தவர்களுடைய புத்திரர்கள் ஆங்கில பாடசாலைகளுக் கனுப்பப்பட்டு ஆண்மையும் அறிவும் தொழில் திறமும் இல்லாத கல்விகற்க நேரிட்டது. சரியான தாய்பாஷைக் கல்வியாவது மதக் கல்வியாவது போதிக்கப்படுவதுமில்லை.

இத்தகைய கல்வி பயின்றவர்கள் பாடசாலையை விட்டகன்றவுடன் தங்கள் மூதாதையோர் செய்த தொழில்கள் அவர்களுக்கு இழிவானதாய்த் தெரிகின்றன. தாங்கள் கல்வி கற்று நாகரீகமடைந்து மேல் அந்தஸ்திற்கு வந்துவிட்டதாக வெண்ணி விவசாயியின் மகன் ஏரைத் தொடவும் கழனியில் கால் வைக்கவும் அருவருப்படைகிறான். பெற்றோர்கள் கஷ்டப்பட்டு உழுது பயிர் செய்துகொண்டிருந்தால் இவன் துரைத்தனத்தாரிடம் 15 ரூ. சம்பளங் கிடைத்தால் போதுமென்று நகரத்திற் சென்று வேலையி லமர்ந்துவிடுகிறான்.

உயர்தரக் கல்வி என்பதைக் கற்றோர் தாங்கள் செய்யும் அடிமை ஊழியத்தையே கௌரவமானதெனக் கருதி அடிமை வாழ்வில் பணம் சம்பாதிப்பதும் சயநல உலக போகங்களை யனுபவிப்பது மட்டுமே தாங்கள் உலகில் செய்யவேண்டிய காரியமென்று கருதுகிறார்களே யன்றித் தாய்நாட்டைப் பற்றியாவது தாய் பாஷையைப் பற்றியாவது எள்ளளவும் சிந்திப்பதேயில்லை. இனிமேனும் பெற்றோர்கள் தம்மக்களுக்கு காலத்திற்குத் தகுதியும் அவசியமானதுமான நம் நாட்டுக் கல்வியைக் கற்பிப்பதில் சிரத்தை யெடுத்துக்கொண்டாலன்றி நாம் க்ஷேமப்படுவது அரிதேயாகும்.

இக் கருத்துக்கொண்டே 1921-ஆம் நாகபுரியிற் கூடிய அகில இந்திய தேசிய மகா சபையின் தீர்மானத்திற் கிணங்க தேசிய தர்மக் கல்விச்சாலை யொன்று ஸ்தாபிக்க வேண்டுமெனும் எண்ணம் சின்னாட்களாயெங்கள் மனதிற் குடிகொண்டு வந்ததைக் கடவுளருளால் பகிரங்கத்தில் நிறைவேற்றிக்காட்டல் வேண்டுமெனக் கருதி சோழவந்தானில் 1924-ஆம் செப்டம்பர்-மீ 4-உ இத்தேசிய பள்ளிக்கூடம் ஆரம்பித்து இனிது நடந்துவருகிறது.

இதில் பாலர் அ ஆ இ யென மூன்று வகுப்புகளும் I முதல் IV வகுப்புகளும் ஏற்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் உள்பட 60 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். இத் திருத் தொண்டின் சிறு ஆரம்பமாக மேற்கூறிய இப் பாடசாலையை ஸ்தாபனம் செய்ய முன்வந்த எங்களுக்குத் தக்கபடி இடம், பொருள், ஏவல் ஆகிய சாதனங்கள் போதுமானவைகளாயில்லை. இப் பள்ளியில் வந்து சேரும் மாணவர்களிடம் சம்பளம் பெற்றுக்கொள்ளாமலேயே தர்மமாகக் கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்பதே எங்களின் கருத்து. அப்படியே இவ்விரண்டு வருடங்களாக நடந்துவருகின்றது. ஆதலின் இந் நன்முயற்சி நிறைவேறும் பொருட்டு சகல தேசாபிமானிகளும், பாஷாபிமானிகளும் தங்கள் நல்லெண்ணங்களையும் தங்களாலியன்ற திரவிய சகாய முதலியவற்றையும் தாராளமாகக் கொடுத்து எங்கள் பேராவலை விருத்தி செய்துவரல்வேண்டுவதோடு ஜாதி, மத, பேத வித்தியாசமன்னியிலும் இவ் வித்தியாசாலையில் கல்வி கற்பிக்கப் படுமென்றும் உறுதி கூறுகின்றோம்.

மற்றும் மாணவர்கள் நன்னடக்கை, தெய்வபக்தி, தேசபக்தி, முதலியவற்றில் விசேஷ சிரத்தையுடன் பழக்கப்படுத்தப் படுவார்கள். இப் பேருபகார திருத்தொண்டிற்கு நந் தேசாபிமானிகள் யாவரும் முன்வந்து தகுந்த ஆதரவுகளைப் புரிவார்களென்று நம்புகின்றோம்.

நாளடைவில் இப்பள்ளியடைந்து வரும் அபிவிருத்தி இதற்களிக்கப்படும் நன்கொடை இவைகளைப்பற்றியும் மற்றும் இப்பள்ளியின் நடவடிக்கைகளைப் பற்றியும் வருடந்தோறும் வரவு செலவு கணக்குகளைக் கணக்குப் பரிசோதக ரறிக்கையுடனும் வருடாந்திர அறிக்கைப் பத்திரம் மூலம் வெளியிடப்படும்.

மேலும் இத்தர்மப் பள்ளியின் காரியதரிசிகளிலொருவராகிய ஸ்ரீமான் மு. சுப்பிரமணிய முதலியாரவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாக ஓராண்டு சிறைப்பட்ட காலையில் அன்னவரால் தக்க வாதாரங்கள் கொண்ட மூல புத்தகங்களிலிருந்து இனிய தமிழ் நடையி லெழுதப்பட்ட வீர சிகை தானாஜி அல்லது ஓர் மகாராஷ்டிர வீரனென்று பெயர் புனைந்த நாவலைத் தனது சொந்தச் செலவிலேயே அச்சியற்றி வித்து அதனால் வரும் வருவாயனைத்தும் இப் பள்ளியின் நிதிக்குச் சேர்க்கும்படியாகக் கொடுத்திருக்கிறார். இஃது வீரச்சுவையுடன் தேசாபிமானமும் நிறைந்தது. இதன் விலை அணா 0—6—0 இப்புத்தகத்தை வாசிப்பதினால் விஷயஞானம் பெறுவதுடன் இப் பள்ளியையும் ஒருவிதத்தி லாதரித்தவராவார்கள்.

## வருடக் கொண்டாட்டம்

முதலாவது வருடக் கொண்டாட்டம் 4-9-25-ல் சென்னை ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரவர்களின் தலைமையின்கீழ் நடத்துவதாகத் தீர்மானித்து ஷெயார் மதுரைக்கு சுயராஜ்யக் கட்சியின் பிரசார விஷயமாய் வந்திருக்கும்பொழுது நேரில் பார்த்து சம்மதம் பெற காரியதரிசிகள் சென்றிருந்தார்கள். 4-9-25-ல் தான் வரமுடியாதென்றும் 14-9-25-ந் தேதிக்கு கொண்டாட்டத்தை ஒத்திவைக்கும்படியாயும் கேட்டுக்கொண்டார். அவ்வண்ணமே 14-ந் தேதிக்கே வருடக் கொண்டாட்டத்தை யொத்திவைக்கப்பட்டது. அத்தேதியில் நன்னிலத்தில் நடைபெறும் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கத்தான் 12-9-25-ல் போகவேண்டியிருக்கிறபடியாலும் உடம்புஅசௌகரியமாயிருக்கிறதென்றும் வருடக் கொண்டாட்டத்தை 5-10-25-உக்கு ஒத்திவைத்துக்கொள்ளுமாறும் தந்தி மூலம் அறிவித்திருந்தார். அக்டோபர் 3, 4 தேதிகளில் ஸ்ரீவில்லிபுத்தூர் மகாநாட்டிற்குப் போகவேண்டியிருப்பதால் விழாவை 10-ந் தேதிக்கு மாற்றி வைத்துக்கொள்ள வேண்டுமென்று கடித மூலமாக 28-9-25-ல் தெரிவித்தார். அப்படியே 10-ந் தேதிக்கே ஒத்திவைத்தோம். பிறகு 10-10-25-ல் சென்னையில் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்குத் தாம் இருக்கவேண்டியிருப்பதால் ஷை கொண்டாட்டத்தை 12-ந் தேதி தள்ளிவைத்துக்கொள்ளும்படி 5-10-25-ல் தந்தி மூலம் தெரிவித்தார். கடைசியாக தான் வந்து வருடக் கொண்டாட்டத்தை நடத்திவைக்க முடியாததற்கு வருந்துவதாகவும் தன்னை எதிர்பாராமலே வருடக் கொண்டாட்டத்தை நடத்திக் கொள்ளும்படிக்கும் 9-10-25-ல் தந்தி வாயிலாக அறிவித்துவிட்டபடியால் 12-10-25 தேதியிலேயே நிலக்கோட்டைத் தாலுகா பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்களின் தலைமையின்கீழ் வருடக்கொண்டாட்டம் இனிது நடந்தேறியது.

ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்கள் தன்னுடைய முடிவுரைப் பிரசங்கத்தில் இம்மாதிரிப் பள்ளிக்கூடங்கள் நம் நாட்டின் அபிவிருத்திக்கு அத்யாவசியமென்றும் இப் பள்ளிக்குச் சாசுவதமான கட்டிடமவசியமென்றும் கட்டிடத்திற்குத் தன்னாலியன்ற அளவு பொருளுதவி செய்வதாகவும் தனது நண்பர்களின் மூலமாகவும் வசூல் செய்து கொடுப்பதாயும் வாக்களித்ததுடன் பொது

ஜனங்கள் அவர்களாலியன்ற அளவுபொருள் உதவிசெய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். கொண்டாட்டதினத்தன்று இப்பள்ளியின் மாணவர்களால் ஸ்ரீமான் மு. சுப்பிரமணியமுதலியாரவர்களால் எழுதப்பட்ட வீரசிங்கதாஹூரியென்னும்நாவல்நாடக ரூபமாயெல்லோரும் கண்டு களிக்க நடித்துக் காட்டினர். அக்கிராசனரால் மாணவர்களுக்குப் பரிசளிக்கப்பட்ட பின்னர் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு கொண்டாட்ட மினிது முடிவு பெற்றது.

## பாடங்கள்.

மாணவர்களுக்குப் பாடங்களாக ஓலைச் சுவடிகளில் கணிதம், எண்சுவடி, நீதி வாக்கியங்கள் முதலியனவும், தேசியக் கீதங்களும், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருக்குறள் முதலிய அருட்பாக்களும் ஹிந்தி முதலிய பாடங்களும் கற்றுக்கொடுப்பதுடன் மாலையில் பஞ்சு பட்டை போடுதலும் நூல் நூற்றலும் கற்பிக்கப்பட்டுவருகிறது.

## வந்தனம்.

இப்பள்ளிக்கு இடங்கொடுத்துதவிய பிள்ளையார் கோவிலின் சொந்தக்காரர்களுக்கும் சிறுகச் சிறுக பொருள் கொடுத்துதவும் இவ்வூர் வியாபாரிகளுக்கும் மாதந்தோறும் சந்தாவாகச் செலுத்தும் ஜனாப் ம. சி. அப்துல்சத்தார் சாயபவர்களுக்கும் காரியதரிசிகளுக்குதவியாயிருந்து தினசரி உண்டியலை உடைத்து வரவு வைத்துக் கொண்டு வரும் ஸ்ரீமான் எஸ். மாசானம் பிள்ளையவர்கட்கும் இப்பள்ளியின் கணக்குகளை மாதந்தோறும் பரிசோதித்துவரும் கௌரவ கணக்குப்பரிசோதகர் ஸ்ரீமான் எல். எஸ். ஸ்ரீனிவாசய்யரவர்களுக்கும் முதலாவது வருஷக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்து இனிது நடத்திவைத்த ஸ்ரீமான் சௌந்தர பாண்டிய நாடாரவர்களுக்கும் நன்கொடையளித்த கனவான்களுக்கும் இக் கமிட்டியார் நன்றி செலுத்துகிறார்கள்.

## விசேஷ உதவி

இப் பள்ளிக்கு ஸ்திரமான சாஸ்வத நிதியொன்று சேர்க்க பொது ஜனங்களின் விசேஷ உதவியை இக் கமிட்டியார் எதிர் பார்க்கிறார்கள்.

காரியதரிசிகள்,
மு. சுப்பிரமணிய முதலியார்
தி. வெங்கிடசாமி அய்யா.

## கோவை தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி.

நாளிது-மீ 15-உ. வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-மணிக்கு கோவை நகர் காங்கிரஸ் ஆபிசில், தாலூகா ஜில்லா, மாகாண நிர்வாக கமிட்டிகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவும், அஸ்ஸாம் காங்கிரஸுக்கு டெலிகேட்டுகளைத் தேர்ந்தெடுக்கவும், கணக்குகளைத் தணிக்கை செய்யவும் ஒரு கூட்டம் கூட்டப்பெறும் என்றும் ஷை தாலூக்கா காங்கிரஸ் மெம்பர்களும் அபிமானிகளும் வர வேண்டுமென்றும் கோவை தாலூகா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி டி. கோவிந்தசாமி அறிவிக்கிறார்.

## சோழவந்தான் தேசியப் பள்ளிக்கூட இரண்டாவது ஆண்டு விழா

5—10—26உ செவ்வாய்க் கிழமை மாலை 3-மணிக்கு ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரை தேசியப் பள்ளிக்கூடச் சிறுவர்களுடன் பல உள்ளூர் பிரமுகர்களால் ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்று தேசிய பஜனையுடன் அழைத்துச் செல்லப்பட்டது. ஆண்டு விழாவின் அக்கிராசனர் மதுரை பாரிஸ்டர் ஸ்ரீமான் உத்தமபாளையம் பி. டி. ராஜன் அவர்களும் ஸ்ரீமான் முத்துக் காமாக்ஷி முதலியார் அவர்களும் மதுரையில் இருந்து நேரே மோட்டாரில் வர, ஸ்ரீமான் பி. டி. ராஜன் அவர்களையும் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களையும் வாத்திய கோஷத்துடனும் தேசிய பஜனையுடனும் பெருங்கூட்டம் ஊர்வலமாக தேசிய பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவுடன் சோழவந்தான் தேசபக்தர் ஸ்ரீமான் பட்டாபிராமய்யர் அவர்களால் ஸ்ரீமான் ராஜனவர்களை அக்கிராசனம் வகிக்க கேட்டுக் கொள்ளப்பட்டு அவர் அக்கிராசனம் வகித்ததும் ஷை பள்ளிக்கூட மாணவர்களால் பல அருமையான உபன்யாசங்களும் சம்பாஷணைகளும் நடந்தன. காரியதரிசி ஸ்ரீமான் வெங்கிடுசாமய்யாவால் அறிக்கை வாசிக்கப்பட்ட பின்னர் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களை கதர் தீண்டாமை என்கிற விஷயங்களைப் பற்றி பேசும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க சுமார் 2-மணி நேரம் பேசினார். முடிவில் அக்கிராசனர் முடிவுரையுடன் ஸ்ரீமான் மு. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை முடிவடைந்தது. கூட்டத்திற்கு உள்ளூர் பிரமுகர்களும் வெளியூர் பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது முக்கியமானவர்கள் ஸ்ரீமான்கள் சோழவந்தான் பட்டாபிராமய்யர், சேர்மென் கண்ணாயிரம் முதலியார், தேசபக்தர்கள் மு. சுப்பிரமணிய முதலியார், வெங்கிடுசாமி அய்யா, கருப்பட்டி வெங்கிடாசலம் முதலியவர்களும் மதுரையில் இருந்து ஸ்ரீமான்கள் கவுன்சிலர் முத்துகாமாக்ஷி முதலியார், கவுன்சிலர் சாலை முதலியார், கொண்டய்ய நாயுடுகார், கூடலிங்கம் பிள்ளை, திருமகள்மாரன்பிள்ளை, ஆசை வாத்தியாயர் நாகலிங்கம் பிள்ளை, சோமசுந்தரம் பிள்ளை, கிருஷ்ண பிள்ளை, ஜமேதார் சுப்பா நாயுடு முதலிய பல கனவான்களும் வந்திருந்தார்கள். விடாமல் மழை தூரிக் கொண்டே இருந்தும் கூட்டத்திலிருந்த ஜனங்கள் கொஞ்சமும் கலையாமல் மழையில் நனைந்து கொண்டே உபன்யாசம் கேட்டுக் கொண்டிருந்தது மிகவும் குறிப்பிடத் தக்கது.

அன்று இரவு ஸ்ரீமான் மு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வீட்டில் எல்லோரும் விருந்து சாப்பிட்டுவிட்டு இரவு ஒரு மணி வண்டியில் நாயக்கர் ஈரோட்டிற்கும் மற்றவர்கள் மதுரைக்கும் பிரயாணமாகி விட்டார்கள்.

ஒரு நிருபர்.

விலை மிக சொற்பம். குணமே அற்புதம்.
உங்கள் வியாதிகளை குணப்படுத்தி சரீர சுகமாய் ஜீவிக்க விரும்பினுல்
நற்சாக்ஷிகள் பெற்ற எஸ். டி. ஈ. லீலிமார்க்
சுக ஜீவ பில்ஸ்
கோனோரஜைன பில்ஸ்.
உபயோகியுங்கள். பூர்ண சுகமும் ஆச்சர்யமான குணமும் உண்டாக்கும். 40 பில்ஸ் வீதம் கொண்ட 2-வித மருந்தின் விலை ரூ. 1—0—0 வி. பி. 0—7—0, சர்வ தேஷ விஷ மருந்து 2-வித புட்டி 0—6—0. ஆதி திராவிட மக்களுக்கு மேற்படி மூன்றுவித மருந்தும் வி. பி. உள்பட ரூ. 1—4—0. 120 வியாதிகளையும் குணப்படுத்தி பாலர் முதல் விருத்தாப்பியர் வரையிலும் சரீர சுகமாய் ஜீவிக்கலாம்.
விலாசம்: எஸ் தேவசகாயம்,
ஆர். ஸி. ஸ்ட்ரீட், ஈரோடு.

மதன கேசரி.
இணையற்ற மகா தாதுபுஷ்டி லேகியம்.
இது அபார சக்தி வாய்ந்தது. தேகம் வலுக்கும். மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும். நரம் ஸ்தானங்களைப் பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்த விருத்தி, போகசித்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசிரி சஞ்சீவி இதுவே.
1 டின் ரூ. 3. வி. பி. அணா 5.
பிராஜானுகூல ஔஷதாலயம் ஸ்ரீரங்கம்.

## வாலாஜாபாத் (சிவபுரம்)

குப்புசாமி முதலியார் இலவச பாடசாலை மாணவர்க்க வாசகமாணவர் கழக 2வது ஆண்டு நிறைவு விழா 4—10—26 உ திங்கட் கிழமை செங்கற்பட்டு ஜில்லா கல்வி இலாகாத் தலைவர் டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர் பி. ஏ. எல். டி. அவர்களுடைய தலைமையின் கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது என்றும் அவ்வமயம் ஆங்கிலத்திலும் தமிழிலும் மாணவர்களால் நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன என்றும் ஷை கழகத்திற்கு பத்திரிகை உதவல் முதலிய பல உதவிகள் செய்யும் பெரியார்களுக்கு நன்றி செலுத்தப்பட்டது என்றும் சொற்பொழிவுகள் புலவரால் நிகழ்த்தப் பட்டன என்றும் காரியதரிசி திருவாளர் சு. கலிதீர்த்தான் அறிவிக்கிறார்.

பிரமேககுல சம்ஹாரி
சகல வெள்ளை வெட்டை, நீர்க்கடுப்பு, தந்தி மேகம், ரணம், அரை சிவிப்பு, அண்ட வாதம், கைகால் கருப்பு, கிரந்தி, தடிப்புகள், திமிர் முதலியவைகளை ஐந்தே தினத்தில் தீர்க்கிறது. புட்டி 1-க்கு ரூ. 2.

மதன கோலாகல ரசமணி மாத்திரை
மறதி, அசதி, சோம்பல், இடுப்புவலி இவைகளை நீக்கி ஞாபக சக்தி போகசக்தி, வீரியவிர்த்தி முதலியவைகளை யுண்டாக்கும். இரவில் சாப்பிட சிங்க வீரியம்போல் தாதுபுஷ்டியளிக்கிறது. குளிகை 50 ரூ. 4. 25 ரூ. 2

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு (S. I)

4ம் பக்கத் தொடர்ச்சி.

அதன் மூலம் பிரிட்டாணீயமும் இந் நாட்டில் சிரஞ்சீவியாய் விளங்கும். ஆகவே இரு கட்சிகளையும் நாம் ஆதரிக்கக்கூடாது. நமது நாடு ராஜீய விடுதலையடைவதோடு பிராமணீயக் கட்டுகளிலிருந்தும் விடுதலையடைய வேண்டும். இக்காலம் உண்மை தேசபக்தர்களின் கடமையைச் சோதிக்கும்படியான காலமாயிருக்கிறது. நமக்கு தேசீயமே மதம், சுயராஜ்யமே நமது மோட்சம் ஆகவே நமக்குகட்சி அபிமானம் வேண்டியதில்லை; வகுப்புவாதமும்வேண்டியதில்லை; ஆனால் கட்டுப்பாடாக எந்த வகுப்பையாவது மோசஞ் செய்யவோ அடிமைப் படுத்தவோ சூழ்ச்சி செய்தால் நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்த நிலைமையில் நாம் யாருக்கு ஓட்டுக் கொடுப்பதென்பதை முடிவு செய்யவேண்டும்

### தேசபக்தர்களை ஆதரித்தல்.

சுயநல முள்ளவர்களை ஒதுக்கித் தள்ளவேண்டும்; தியாகமில்லாமல் விடுதலையில்லை. எச்சமயத்திலும் எதையும் தியாகஞ் செய்யத் தயாராயிருக்கிறவர்களையே நாம் ஆதரிக்க வேண்டும். பேச்சு சாமார்த்தியத்தாலோ தீர்மானங்கள் மூலமாகவோ சுயராஜ்யம் கிடைக்கப் போவதில்லை; ஆகையால் எந்த சந்தர்ப்பத்திலும் சர்க்காரை எதிர்க்கப் பின் வாங்காத தைரியசாலிகளாயும், அவசியம் நேர்ந்தால் சட்ட சபையிலுள்ள பஞ்சு மெத்தை நாற்காலிகளைத் துறந்து, கரடுமுரடான ஜெயில் அறைகளில் வாசஞ் செய்யத் தயாராயிருக்கிறவர்களாயு முள்ளவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். ஜெயிலுந் தியாகமுந் தான் முடிவாக நமக்கு சுயராஜ்யத்தைக் கொண்டுவரப் போகிற தென்பதை நாம் மனதில் எப்பொழுதும் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த சட்ட சபையின் மூலமாக நம்மால் எவ்வளவு பலனை அடைய முடியுமோ அவ்வளவையும் அடைவதற்கு கட்டுப்பாடான தேசீயக் கோஷ்டி ஒன்று சட்ட சபைக்குள் இருக்க வேண்டியது அவசியம். அடியில் நான் குறிப்பிட்டிருக்கிற திட்டங்களை நிறைவேற்றி வைக்க அவர்கள் முயற்சி செய்யும்படி செய்யவேண்டும். சர்க்காரால் நியமிக்கப்படும் அங்கத்தினர்களை எதிர்பாராமல், சர்க்காரை தோற்கடிக்கக் கூடியவாறு அவர்கள் பெரும்பான்மையோராக வந்து விட்டால், இவைகளை நிறைவேற்றி வைக்க மந்திரி பதவிகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளலாம்.

ஜாதி அபிமானம் கொஞ்சமுமில்லாத இத்தகைய தேச பக்தர்களையே நாம் சட்ட சபைகளுக்கு அனுப்பவேண்டும். ஜாதி அபிமானம் போய், சுயராஜ்ய தாகம் ஏற்பட்டுவிட்டால் அவர் என்ன ஜாதியாராயிருந்தாலுஞ் சரி, எந்த மதஸ்தராயிருந்தாலுஞ் சரி, அவரே நாட்டை விடுவிக்கப் பாடுபடக்கூடிய உத்தமர் என்பதை நீங்கள் அறியவேண்டும். அந்த நிலைமையிலுள்ள உத்தமர்களையே ஜாதியையோ, மதத்தையோ பார்க்காமல் நாம் ஆதரிக்க வேண்டும். அவர்களுக்கே ஓட் கொடுத்து நமது நாட்டை பிரிட்டாணீயத்தின் அடிமைப் பிடிப்பிலிருந்தும் பிராமணீயத்தின் சழகப் பிடிப்பிலிருந்தும் விடுவிக்துமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன் அம்மாதிரி அனுப்பப்படுகிறவர்களிடமிருந்து கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றுமாறு உறுதி மொழி வாங்கிக்கொள்ள வேண்டும்

### திட்டங்கள்.

1 கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற தேசீய வாதிகள் சட்டசபையில் முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்யும்போது, இரட்டை ஆட்சியின் பயனாக மந்திரிகளுக்கும் சர்க்காருக்கும் போராட்டம் ஏற்படும் பட்சத்தில், தேசீய வாதிகள் சர்க்காரை எதிர்க்க தைரியமாய் முன்னிற்கவேண்டும்

2 சீர்திருத்தச் சட்டப்படி கிடைக்கக்கூடிய சகல அனுகூலங்களையும் அடைவதற்கு தேசீய வாதிகள் முயற்சிசெய்வதோடு ஜில்லா கலெக்டர் முதலிய அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் எதேச்சாதிகாரத்தைப் பிடுங்கிச் சகல அதிகாரிகளையும் சட்டசபையின் அதிகாரத்திற்குள் கொண்டுவருவதற்காக சட்டத்தில் செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்யவும் இடைவிடாமல் பாடுபடவேண்டும்

வெளிநாட்டு இந்திய தொழிலாளிகளுக்கு நன்மை செய்வதைப் பற்றியும் தற்கால கல்வியை தேசியக் கல்வியாக வேண்டியதைப் பற்றியும் நிலங்களுக்கு உள்ள தீர்வையை குறைப்பதைப் பற்றியும் சர்க்கார் ஸ்தாபனங்களை தேசீயமாக்குவதைப் பற்றியும் தீண்டாதார் உரிமைகளைப் பற்றியும் கைராட்டினம் பரவுவதைப் பற்றியும் மதுவிலக்கைப் பற்றியும் 6, 7, திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன

## “தமிழ்ப் பெருமக்களுக்கு விண்ணப்பம்.”

செந்தமிழ்த் திருநாட்டுச் செல்வர்காள்!

வரும் நவம்பர்-மீ எட்டாம் நாள் இந்தியா சட்ட சபைக்கும் சென்னை சட்ட சபைக்கும் தேர்தல் நிகழுமென்பது உங்கட்கு நன்கு தெரியும். இச்சோதனைக் காலத்தில் உங்கள் அரும்பெருங் கடமை யாவை என்பதுபற்றியே இவ்விண்ணப்பம் வெளியிடப்படுகிறது.

காங்கிரஸ், சுயராஜ்ஜியம், காந்தி அடிகள் முதலிய மொழிகளை முழக்கிக்கொண்டு சுயநலங் கூட்டத்தார் உங்கள் அடிபணிந்து வாக்குக்கேட்பார்கள். மேற்போந்த மூன்று திருமொழிகளையும் செவிமடுத்து ஏமாற வேண்டாம். காங்கிரஸின் தற்கால நிலைமையைச் சிறிது எண்ணுங்கள் காங்கிரஸ் யாருடைய ஆட்சிக்குள் இருக்கிறது என்பதை உணருங்கள். உங்கட்கும், காங்கிரஸிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை உணர்மின். காங்கிரஸ் ஒரு சிறு கூட்டத்தார் பிறப்பில் உயர்ந்தோர் என எண்ணும் சூழ்ச்சிக் கூட்டத்தார் தொன்மையும் மேன்மையுமுள்ள உங்கள் பழங்குடியை சூத்திரர் என இகழும்கூட்டத்தார் வயம் அகப்பட்டுக் கொண்டதன்றோ? நாட்டிற்காக அரும்பாடுபட்ட திருவாளர்களான நாயுடுகார், நாயக்கர், முதலியார், சர்க்கரை ஆரியா முதலிய பெரியோர்கள் இல்லாத காங்கிரஸன்றோ? தற்கால காங்கிரஸ், என்பதை அறிமின்கள். ‘சுயராஜ்ஜியம்’ என்ற மொழியைக் கண்டு மயங்காதீர்கள். உங்களுக்கும் உங்கள் தலைவர்கட்கும் இல்லாத சுயராஜ்ஜிய வேட்கை இப்பிராமணத் தலைவர்களுக்கு இருக்குமா என்பதை கவனியுங்கள். சுயராஜ்ஜியத்தை எளிதில் ஈயவல்ல ஒத்துழையா இயக்கத்தை ஒடுக்கி காந்தி அடிகளையும் தலைமைப் பதவியினின்றும் இறக்கிய இத்தலைவர்கள் சுயராஜ்ஜியத்திற்கு உண்மையாய் உழைப்பார்களாவென்று எண்ணுங்கள். சட்ட சபையினால் சுயராஜ்ஜியம் வாராதென்று அறிந்திருந்தும் சட்ட சபையைக் கைப்பற்றுவதன் நோக்கம் என்னை? என்பதை நீங்கள் கவனிக்க வேண்டாமா? சட்ட சபையின்மூலம் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்கே என்பதை ஒரு முறைக்குப் பன்முறை நினைவூட்டுகின்றேன். இக்கூட்டத்தார் மலையாளக் குடிவார மசோதாவையும் இந்து மத அறநிலையப் பாதுகாப்பு மசோதாவையும் எதிர்த்ததிலிருந்தே விளங்கவில்லையா? காந்தி அடிகளாரின் திருப்பெயரை முழக்குவதைக் கண்டு நீங்கள் ஏமாற வேண்டாம். அடிகளார்க்கும் இப்போலிக் கூட்டத்தார்க்கும் தொடர்பே இல்லை. நுங்களை ஏமாற்றுவதற்கே அடிகளின் பெயரை அறைகின்றார்கள். வாக்கு வன்மையைக் கண்டு நீங்கள் ஏக்கமுற வேண்டாம். இக்கூட்டத்தார்க்கு இச்சூழ்ச்சி முறை புதிதன்று. பண்டும் இன்றும், என்றும், இப்படியே. சமயத்தினின்றும் சிறுகச் சிறுக விடுதலை அடையும் நுங்களை அரசியலினும் அடிமைப்படுத்த எண்ணுகிறார்கள் என்பதை உய்த்துணருங்கள்.

பழங்குடி மக்காள்!

உங்களது தலைவர் இருவரை சிறைக்கோட்டத்திற்கு அனுப்ப வேண்டுமென அதிகார வர்க்கத்தாரின் அடிபணியும் சுயநலக் கூட்டத்தாருக்கா வாக்களிக்கப் போகிறீர்கள்! நமக்குள் எவ்வித வேற்றுமையிருந்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு ஒற்றுமையாகப் போவதற்கு ஆற்றல் இன்றி இருவர்களையும் மாற்றாராக எண்ணி அதிகார வர்க்கத்தாரை அழைக்கும் தன்மையைக் கவனியுங்கள்.

செந்தமிழ்க் குருதியன்றோ நுங்கள் யாக்கைகளில் ஓடுகின்றது. உண்மைத் தமிழ் மக்கள் என்பதை நீங்கள் காட்ட வேண்டாமா? கதராடை அணிந்திருப்பது பற்றி ஏமாற வேண்டாம். இக்கூட்டத்தார் கதராடையின்மேல் வைத்தப்பற்று இத்துணைத் தென்பதை காட்ட இடமின்மை குறித்து வருந்துகின்றேன். கட்டாய உடையாக இருக்க வேண்டுமென இருந்த தீர்மானத்தை மாற்றி வேண்டும் போது அணியலாம் என காங்கிரஸ் விதிகளில் வரைந்துகொண்டவர்கள் என்பதை மறக்க வேண்டாம். நூல் சந்தாவை மாற்றிய புண்ணியவான்கள் என்பதை அறியுங்கள்.

தமிழ்மக்களே, இப்போலிக் கூட்டத்தாருக்கு வாக்கு அளியாதீர்கள். தமிழ் தனிமொழி அன்று; வழிமொழி என்று பிதற்றும் நீர்மையரன்றோ? பேர் கொண்ட பார்ப்பனன் ஒருவன் உண்ணுவதை கொலை கடிந்து களவு நீக்கி ஒழுகும் நீங்கள் பார்த்து விட்டால் ஒரு திங்கள் உண்ணா விரதம் இருப்பேன் என உரைத்தவர்க்கா வாக்களிக்கப் போகிறீர்கள்? நடு நிலைமையில் நின்று நன்கு ஆய்ந்து வாக்களியுங்கள். உண்மைத் தமிழ் மக்கள் என்பதை உலகத்தாருக்குக் காட்டுங்கள். நவம்பர் எட்டாம் நாளன்று தமிழர்கள் என்பதைக் காட்ட எழுமின்! எழுமின்!! விழிமின்!!! இறைவன் இன்னருள் முகிழ்க்க. காந்தீயம் உலகெலாம் ஓங்குக. தமிழ்த்தாய் வாழ்க.

பழனிக்குமாரன்.

---

நண்பர்களே!

தீபாவளி நெருங்குகிறது கதராடை அணிந்து நம் சுயமரியாதையைக் காப்பாற்றுங்கள்

## வெளியூர்ச் செய்திகள்.

### சென்னை சித்தாந்தப் பிரகாச சபை.

19-9-26-உயில் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் "சித்தாந்தப் பிரகாச சபை"யின் ஆதரவில் ஒரு கூட்டம் திவான் பகதூர் தணிகாசலம் செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. திருவாளர்கள் சக்கரை செட்டியார், மணி, கோடீஸ்வா முதலியார், பாலகுருசிவம் என்பவர்கள் முறையே "இராமலிங்கசுவாமிகள்," 'சமய ஒழுக்கம்," "சைவ சமயம்," என்ற பொருள்கள்பற்றி சபையோர் வியக்கும்படிச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள் என்றும் பிரமணார். அபத்தங்களும் வெளிப்படுத்தப்பட்டன என்றும், தாழ்த்தப்பட்ட சகோதரர் பாலகுருசிவம் மேற்கோள் ஆராய்ச்சிகளுடன் பேசினமை பாராட்டத்தக்கதென்றும் திரு. தி. முத்துச்சாமி அறிவிக்கிறார்.

### மதுரை சித்த தரும வைத்தியசாலை திறப்பு விழா.

மதுரை தமிழ் சித்த வைத்திய சங்க ஆதரவில் சென்னை முதல் அமைச்சர் கனம் பனகால் ராஜா அவர்கள் 28-9-26-உ மாலை சித்த தரும வைத்தியசாலையைத் திறந்து வைத்தனர். அவ்வமயம் சங்க காரியதரிசி சாமி. விருதை, சிவஞானயோகிகளால் ஒரு வரவேற்புத்தாள் வாசித்துக் கொடுக்கப்பட்டது. சாமி விருதை, சிவஞான யோகிகளும், ஆர். எஸ். பதி அவர்களும் முறையே தமிழிலும் ஆங்கிலத்திலும் சித்த வைத்தியத்தின் மாட்சியை விளக்கிப் பேசினர்கள். முடிவில் கனம் பனகால் அரசர் அவர்கள் சித்த வைத்தியத்தின் பழமையையும் மேன்மையையும் தக்க சான்றுகளுடன் விரிவாகப் பேசி "தமிழ் சித்த தரும வைத்தியசாலை"க்கு வாழ்த்துக் கூறியவுடன் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன என திரு வி. நடராஜ பிள்ளையவர்கள் அறிவிக்கிறார்.

### நாகபட்டணம்.

### கள்ளர் மஹா சங்க அறிக்கை

அட்சய ஆண்டு ஐப்பசி திங்கள் 1-உ (17—10—26.) ஞாயிற்றுக்கிழமை கள்ளர் குல முன்னேற்றத்தைக் கருதி ஓர் மஹாநாடு உயர் திருவாளர் இராஜப்பா விஜயதேவர் எம். எல். சி. அவர்கள் தலைமையின் கீழ் நாகபட்டினம் ஹாவ்லக் தியேட்டரில் நடைபெறும். பல துறைகளிலும் தீர்மானங்கள் கொண்டு வரலாம். தீர்மானங்கள் கொண்டு வரக் கருதுவோர் முன்னுடியே வரவேற்புக் கழக காரியதரிசிக்கு எழுதக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் என்றும் வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்க ஏற்பாடாகி வருதலால் அங்ஙனம் வருவோர் காரியதரிசிக்கு முன்னுடியே எழுதி இலவச டிக்கட்டுகள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் வரவேற்புக் கழக காரியதரிசிகள் கோவிந்தசாமி சேதிராயர், திருஞானசம்பந்த மூர்த்தி வீரமுண்டார், ஆகிய இருவரும், அறிவிக்கிறார்கள்.

## மதிப்புரை.

### செந்தமிழ்ச் செல்வி.

(மாத வெளியீடு.)

நாகரிகத்தில் சிறந்து விளங்கும் நாடுகளில் பத்திரிகைகள் நிலை சிறந்து நிற்கும். மேனாடுகளை நோக்க நமது நாட்டில் பத்திரிகைகளின் தொகையும், செல்வாக்கும் குறைவுதான். பல அறிஞர்களின் உள்ளக் கருத்துக்களை ஒருங்கு திரட்டி உணர்த்தலால் மக்கள் அறிவை பண்படுத்துதலில் பத்திரிகைகள் வல்லன. நமது நாட்டில் தினசரி, வாரப் பத்திரிகைகள் "அரசியல் கிளர்ச்சியில்" பாய்ந்து செல்லும் வேகத்தில் சமூக சீர்திருத்தவிஷயத்தில் அக்கறையைக் காட்ட வேண்டியநிலையிலிருக்கின்றன. கல்வி, சமயம், தத்துவம் சமத்துவ உணர்ச்சி ஆகிய விஷயங்களில், எல்லாருக்கும் பயன்படத்தக்க ஒரு ஸ்திரமான இருத்தம் ஏற்பட்டால் தான் நமது சமூகத்தைப் பிணித்திருக்கும் குருட்டு நம்பிக்கைகள் ஒழியும். இத்துறையில் வேலை செய்யவல்லன மாத வெளியீடுகளே யாகும். ஏனெனில் அறிஞர்கள் சாவதானமாக ஆராய்ந்து கண்ட முடிவுகளை அவற்றில் வெளிவர இயலும் தமிழ் நாட்டில் அத்தகைய திங்கள் வெளியீடுகளிற் சிறந்தது நமது "செந்தமிழ்ச் செல்வி" எனத் துணிந்து கூறலாம். இதில் பெரும்பாலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்லவர்களான பேரறிஞர்களின் ஆராய்ச்சி உரைகளை வெளி வருகின்றன, பார்ப்பனீயத்தின் மாயப்புரட்டுகள் வெளியாக்கப் படுகின்றன. தமிழர் நாகரிகம் தெள்ளத்தெளிய விளக்கப்படுகிறது. பண்டைய இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகளும் புதிய மேனாட்டுச் சாஸ்திர முறைகளும் ஆராய்ச்சி வல்லுநரால் பொருத்தமாய் எழுதப்படுகின்றன. மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் மாதந்தோறும் வெளியாகும் 'செந்தமிழ்' வெளியீடு பார்ப்பன கோஷ்டியிலகப்பட்டுப் பார்ப்பன மயமாகிக் கொண்டிருக்கிறது. அதைத் தோற்றுவித்த ஸ்ரீமான் பாண்டித் துரைத்தேவரவர்களின் உத்தேசம் அடியோடு புறக்கணிக்கப்படுகிறது. பார்ப்பனரல்லாதார் பொருள் ஏராளமாயிருந்தும், சேதுபதி மஹாராஜா தலைவராயிருந்தும், தமிழ்ச் சங்கத்தையும் அதைச் சார்ந்த கலாசாலையையும் "செந்தமிழ்" மாத சஞ்சிகையையும் பார்ப்பனராதிக்கத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பது பரிதபிக்கத்தக்கது. இக்குறைகளைக் கண்டே பல தமிழபிமானிகள் தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் என்னும் பெயரால் மற்றொரு உண்மைத் தமிழ்க்கழகம் கண்டனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் போல் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்கு புதுக்கோட்டை மஹாராஜா, ராமநாதபுரம் மஹாராஜா, ஏனைய ஜமீன்தார்கள், நாட்டுக்கோட்டை நகரத்தார் பிரபுக்கள் முதலியோருடைய நன்கொடைகளும் ஆதரவும் இல்லையாயினும், அது தோன்றிய குறுகிய காலத்துள் நாவலர் பதிப்பு, சங்கப்பதிப்பு ஆகியவைகளையும் தோற்கடிக்கத் தக்கநிலைமையில்பல பழைய புதிய நூல்களை அது வெளியேற்றி யிருக்கிறது. ஒரு சிறு பிழையுங்காண முடியாது. பெரும்பாலும் புத்தகக் கட்டடங்களும் நவீன முறையில் கண்கவர்வனப்பினவா யிருக்கும். நாம் தலைப்பிற் குறித்த "செந்தமிழ்ச் செல்வி"யும் இக்கழகத்தினின்றும் வெளி வருவதுதான். உயர் திருவாளர்கள் கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் எம். ஏ. எம். எல். பா. வே. மாணிக்க நாயக்கர் போன்ற இருமொழிப் புலவர்களின் பேராதரவு பெற்ற நமது "செந்தமிழ்ச் செல்வி"யின் மாட்சியை விரிக்கவும் வேண்டுமோ? தமிழ் மக்களின் முன்னேற்றங் கருதி உழைக்கும் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களே நமது "செல்வி"யின் ஆசிரியராவர்கள். வடமொழிக் கலப்பில்லாத "தனிச் செந்தமிழ் நடை" படிக்கப்படிக்க இனிக்கும். ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் அன்புடன் வரவேற்று ஆதரிப்பாராக.

வருட சந்தா.

| | | |
|---|---|---|
| உள்நாடு | ... | ரூ. 3—0—0 |
| வெளிநாடு | ... | ரூ. 3—8—0 |

கிடைக்குமிடம்:—

திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (லிமிடெட்) 306, லிங்க செட்டி தெரு சென்னை.

### திருச்சினாப்பள்ளி ஜில்லா தாழ்த்தப்பட்டவகளின் 3-வது மகாநாடு

செப்டம்பர்-மீ 18, 19, தேதிகளில் திருச்சினாப்பள்ளி ஜில்லா மணப்பாறையில் நடந்த தாழ்த்தப்பட்டவர்களின் மகா நாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான்கள் ஈ. வே. ராமசாமி நாயக்கர், ஆர். வீரையன், எம். எல். சி. அவர்களுக்கும் ஏழைகள் முன்னேற்றத்தில் அனுதாபப்பட்டு மகாநாட்டிற்கு விஜயஞ்செய்து ஜாதி வித்தியாசம் தீண்டாமை என்னும் இருமாப்பை, மறந்தும் அடியோடு களைந்தும் தாழ்ந்த வகுப்பாரென்றும் தீண்டாதவர்களென்றும் கருதப்பட்ட எங்களுடன் சமபந்திபோஜனம் செய்து சந்தோஷிக்கச்செய்த ஸ்ரீமான்கள் ஆம்பூர் என். மூர்த்தி ஐயர், திருச்சி "தமிழர்" பத்திராசிரியர் பஞ்சரத்தினம் பிள்ளை எஸ். பி. ஒய். ஆரியா, ஈரோடு மைதீன்பாஷாசாகிப், பரமகுடி, வீ. பீட்டர், மதுரை கூடலிங்கம் பிள்ளை திருச்சினாப்பள்ளி ஜெ எம். மாசிலாமணிப் பிள்ளை உறையூர் கொ. வெ. மு. இலட்சுமணன் முதலியவர்களுக்கும் மற்ற கனதனவான்களுககும் தன்னுடைய மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக்கொள்வதாக எம். சாமிநாதன் அறிவிக்கிறார்.

### கும்பகோணம்.

### சன்மார்க்க சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா.

நிகழும் அட்சய ஆண்டு புரட்டாசித் திங்கள் 24உ (10—10—26)ல் சென்னை மேரி மஹாராணியார் கல்லூரி தமிழாசிரியர் திருவாளர் கா. நமசிவாய முதலியாரவர்கள் தலைமையின் கீழ் நடை பெறுமென்று அச்சங்கத்தின் தலைவர் ஜி கல்யாணம் அவர்களும் அமைச்சர் உ. தியாகராஜன் அவர்களும் அறிவிக்கிறா

# இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளி விடப்பட்ட பங்குகள் 7,390-க்கு } 73,900
வசூலிக்கப்பட்டது —ரூ. 50,430.
டிபாசிட்டுகள் ரூ. 86,346-7-4.
நடைமுதல் தொகைரூ. 1,50,275-9-5

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-16-ல் வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும் முயற்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப் பட்டிருப்பதும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளது வரை யாதொரு போக்குகுத்தி யில்லாமலும் இருப்பதி லிருந்து மானேஜிங் டைரக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,
31—5—26. மானேஜிங் டைரக்டர்,


ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தன தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம். சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிப்படுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி



ஸ்ரீவில்லிபுத்தூர்
## பி. பி. அன்ஸன்
பிஸ்கட் பாக்டரி.
குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்
அரரூட் பிஸ்கட்.
சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.
சூஸ்பரி பிஸ்கட்.
புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.
பழம் கேக்.
எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்
P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற
## ராஜவைத்ய ஆஸ்ரமம்.
சாஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
மேகரணங்கள், வெள்ளொலியாதி, ராஜபிளவை, கட்டிகள்,
நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல்
சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.
ஆயிரக்கணக்கான
மூலபவுத்ர வியாதியஸ்தர்கள்.
சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



## ஜீர்ணமிர்தம்.
தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

ஆஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலிய வற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.




பெட்ரோமாக்ஸ் லைட்.
லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைசயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனம்.
ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அநுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அநுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



வித்வத்வம்! அனுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

## எமது "ஆனந்த குண போதினி

ஆனந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவரத் துவங்குகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆனந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.



ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்.
25000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

## ஆங்கில ஆசான் அல்லது போதினி




ஆங்கில ஆசான்

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 7-ம் பதிப்பு 700 பக்கம் கொண்ட ஓர் பெரிய புஸ்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புஸ்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1- கு விலை ரூ. 2—0—0.
தபால் செலவு ரூ. 0—6—0.

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ: 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை



இனம் இனம்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.